# மன்னா

ஆட்சித் தலைவர்களை நம்பாதீர்கள். உன்னை மீட்க இயலாத மானிட மக்களை நம்ப வேண்டாம்... (தி.பா 146:3)

மன்னார் மறை மாவட்டத்தின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை

பொழிவு 13 | புரட்டாதி, 2000 | (தனிச்சுற்றுக்கு மட்டும்) | குவிப்பு 64 | விலை ரூபா 10

மன்னார் மறைவட்ட வெளியீடு / PUBLISHED BY THE DIOCESE OF MANNAR


# மன்னார் மறை மாவட்டத்தில் மேலும் இரண்டு புதிய பங்குகள்

### பேசாலை, தலைமன்னார்ப் பங்குகளின் விசாலப் படுத்தப்பட்ட புதிய முகம்

## கீளியன் குடியிருப்புப் பங்கு

**முதல் பங்குத் தந்தையாக அருட் பணியாளர் சீமான் மரியதாசன் அவர்கள்**

அருள் பொழியும் இவ் யூபிலி ஆண்டில் கீளியன் குடியிருப்பு புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தை தாய்க்கோவிலாகக் கொண்ட புதிய பங்கை 08.09.2000 அன்று மன்னார் ஆயர் அவர்கள் சம்பிரதாயபூர்வமாகப் பிரகடனம் செய்து வைத்தார். பேசாலைப், பங்கில் இருந்து பிரிக்கப்பட்ட கீளியன் குடியிருப்பு புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம், நடுக்குடா புனித ஆரோக்கிய அன்னை ஆலயம், நடுக்குடா புனித அந்தோனியார் சிற்றாலயம், துள்ளுகுடியிருப்பு புனித காணிக்கைமாதா ஆலயம், பாவிலுப்பட்டான் கட்டுக் குடியிருப்பு குழந்தை இயேசு திருத்தலம், கௌவையன் குடியிருப்பு தலைமன்னார்ப் பங்கிலிருந்து பிரிக்கப்பட்ட கட்டுக்காரன் குடியிருப்பு புனித யாகப்பர் ஆலயம், பருத்திப் பண்ணை( சுவாமி தோட்டம்) புனித அந்தோனியார் சிற்றாலயம்,• ஆகிய துணைப் பங்குகள் இப்புதிய பங்கில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### செட்டிகுளப் பங்கின் விசாலப் படுத்தப்பட்ட புதிய முகம்

## இலுப்பைக்குளம் பங்கு

**முதல் பங்குத் தந்தையாக அருட் பணியாளர் விக்டர் அவிதப்பர் அவர்கள்**

இலுப்பைக்குளம் புனித அடைக்கல அன்னை ஆலயத்தை தாய்க்கோவிலாகக் கொண்ட புதிய பங்கை 14.09.2000 அன்று மன்னார் ஆயர் அவர்கள் சம்பிரதாய பூர்வமாகப் பிரகடனம் செய்து வைத்தார். செட்டிகுளப் பங்கில் இருந்து பிரிக்கப்பட்ட இலுப்பைக்குளம் புனித அடைக்கலஅன்னை ஆலயம், நேரிய குளம் கப்பலேந்தி மாதா ஆலயம், வேப்பங்குளம் திரு இருதய ஆண்டவர் ஆலயம், துட்டுவாகை குழந்தை இயேசு ஆலயம், வீரபுரம் வீட்டுத் திட்டம், பாவற்குளம் ஆகிய ஐந்து துணைப்பங்குகள் இப்புதிய பங்கில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

*புதிய பங்கின் பங்குத் தந்தையர்களுக்கும். பங்கு மக்களுக்கும் மறை மாவட்ட ஆயர் குருக்கள் இறைமக்கள் சார்பில் வாழ்த்துக்களையும் செபங்களையும் மன்னா தெரிவித்து நிற்கின்றது. (ஆ-ர்)*



## அன்னை தெரேசா மறைந்து மூன்று ஆண்டுகள் நிறைவு

(05.09.2000)

அன்னையே நீ மறைந்து ஆண்டுகள் மூன்று
அவனியில் உன் பணி இன்னமும் தொடர்கதை
அக்னெஸ் என்ற பெயர் அன்னையாய் ஆனதே
அன்பின் தாயே அஞ்சலிகள் செய்கின்றோம்.

*நிமால், சிறிய குருமடம் , மன்னார்*

## கண்ணீர் அஞ்சலி

அருட்தந்தை விக்ரர் சோசை அடிகளாரின் அன்புத் தந்தை அவர்கள் தனது 84 ஆவது வயதில் இறைபதம் அடைந்தார். இவருடைய இறுதிப் பயண நிகழ்வுள் 05.09.2000 அன்று வங்காலையில் நடைபெற்றது. அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும், இவரது பிரிவால் துயருறும் உற்றார் உறவினருக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் குருக்கள் இறைமக்கள் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம் (ஆ-ர்)

திருமறைக்கும் தமிழுக்கும் செய்த அளப்பெரிய சேவையைப் பாராட்டி

## மன்னார் ஆயர் அவர்களினால் கலைஞர் குழந்தை அவர்கள் கௌரவிக்கப்பட்டார்

**"திருக்கலை வேந்தன"** என்ற சிறப்புப் பட்டம் சூட்டி, பொன்னாடை போர்த்தி, பொற்கிளி வழங்கி கௌரவிப்பு



முருங்கன் முத்தமிழ் கலா நாடக மன்றம், மன்னார் திருமறைக்கலா மன்ற ஆதரவில் கடந்த 2.09.2000 அன்று மன்னார் நகர மண்டபத்தில் நிகழ்த்திய ஒரு கலை நிகழ்வின் போதே இக்கௌரவிப்பு நிகழ்ச்சி இடம்பெற்றது. இக்கலை நிகழ்வின்போது முருங்கன் முத்தமிழ் நாடக மன்றத்தினரால் "கல் சுமந்த காவலர்கள்" என்ற நாட்டுக்கூத்து மரபு நாடகம் மேடையேற்றப்பட்டது. இரண்டு காட்சிகளாக இந் நிகழ்வு இடம்பெற்றது. காலை 10 மணிக்கு இடம் பெற்ற நிகழ்வின் போது மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர் உயர்திரு ஆபேல் றெவல் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். இந்நிகழ்வின்போது கலைஞர் குழந்தை அவர்களின் கலைச்சேவையைப் பாராட்டி ஆயர், கல்விப் பணிப்பாளர் மற்றும் நவரெட்னம் அடிகள் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.



மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களின

## ஆயர் அபிசேகத்தின் 8ஆவது ஆண்டு நிறைவு

**(20.10.2000)**

கண்டவுடன் புன்னகைப்பூச் செண்டை நீட்டிக்
கருணையுடன் எமை அணைப்பார் கனிந்த சொற்கள்
தொண்டர்களின் தொண்டனென வாழும் நெஞ்சம்
துயர் துடைக்கும் தூய உள்ளம் வாழ்க வாழ்க

*அமுது*

# அன்பியங்களின் யூபிலி விழா

- *மறைமாவட்டத்தின் அனைத்துப் பங்குகளில் இருந்தும் 600க்கும் அதிகமான பணியாளர்கள் 3 நாள் தியானத்தில் பங்கேற்பு*
- *ஆயர் தலைமையில் குருக்கள் இணைந்த சிறப்புத்திருப்பலி*
- *அர்த்தமுள்ள கலைநிகழ்வுகள்*

மறைமாவட்ட ரீதியிலான அன்பிய யூபிலியை முன்னிட்டு மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள அனைத்து அன்பியப் பணியாளர்களுக்குமான சிறப்புத்தியானம் புரட்டாதி 15,16,17ந் திகதிகளில் மன்னார் திருமறைப்பணியகத்தில் இடம்பெற்றது. இந்த மூன்று நாள் தியானத்தின் இறுதிநாளான 17ந் திகதி மாலை 5மணிக்கு மன்னார் புனித செபஸ்ரியார் பேராலய வளாகத்தில் மன்னார் ஆயரின் தலைமையில் சிறப்புத்திருப்பலி இடம்பெற்றது. அதைத் தொடர்ந்து அன்பிய யூபிலியை முன்னிட்டு கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. (அன்பியப் பணியாளர் மத்தியில் ஆயர் ஆற்றிய உரையின் சுருக்கும் உள்ளே....)

உமது அரசு எல்லாக் காலங்களிலும் உள்ள அரசு (தி. பா. 145: 13)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைமாவட்டச் செய்திகள்

## மறைக்கல்வி வாரம்

திருவழிப்பாட்டுக் கலண்டரில் புரட்டாதி 24 ஞாயிற்றுக் கிழமை தேசிய மறைக்கல்வி தினம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தினம் மன்னார் மறை மாவட்டத்தில் பின்போடப்பட்டுள்ளது. ஐப்பசி 23-29 ஆம் திகதிவரை பங்குகளில் மறைக்கல்வி வாரம் அனுஸ்டிக்கப்படும் ஐப்பசி 29 ஆம் திகதி மறைக்கல்வி ஞாயிறாகக் கொண்டாடப்படும

### யூபிலி ஆண்டில் கிறிஸ்மஸ் வாழ்த்தை அர்த்தமுடன் அறிவிக்க

## விசேட கிறிஸ்மஸ் வாழ்த்து மடல்

யூபிலி ஆண்டில் இறைவார்த்தையை அறிவிப்பதற்கு உதவி செய்யும் முகமாக (பைபிள் இல்லாதவர்களுக்கு பைபிள் பெற்றுக் கொடுக்க) போட்டோ கொப்பிப் பேப்பரில் கிறிஸ்மஸ் வாழ்த்து மடல்கள் அச்சிட்டு வினியோகிக்கப்பட இருக்கின்றன. இம்மடல்களை வாங்கி அனுப்புவதன் மூலம் ஒருவர் வசதி குறைந்தவர்களுக்கு பைபிள் வாங்கிக் கொடுக்கும் நற்செயலில் பங்காளர் ஆகின்றார். இந்த நல்ல நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்மஸ் வாழ்த்துமடல்கள் ஒரு ரூபா செலவில் அச்சிடப்பட்டு பங்குகளில் 5 ரூபாவிற்கு விற்பனை செய்யலாம். இதில் வரும் இலாபத்தை எடுத்து பங்குகளில் கிறிஸ்மஸ் தினம் அன்று வேதாகமம் இல்லாதவர்களுக்கு இலவசமாக வேதாகமத்தை விநியோகம் செய்யலாம். பங்கு மறைவாழ்வுப் பணியாளர் ஒன்றியம் இதற்குப் பொறுப்பாக இருக்கும்.

## பங்குகளில் !பிலித் தியானம்

22-24 .09. 2000 செட்டிகுளம் - குழு 01, 02
06-08 .10. 2000 வவுனியா - குழு 01, 02
13-15 .10. 2000 கற்கடந்தகுளம் - குழு 01

மன்னார் பிரஜைகள் குழுவின் புதிய தலைவராக

## நவரெட்ணம் அடிகளார்

மன்னார் மறைமாவட்ட நிதியாளராக புதிய நியமனம் பெற்றுவந்துள்ள நவரெட்னம் அடிகளார் தற்போது மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

## அடுத்த மன்னா இதழ் மறைக்கல்வி சிறப்பிதழாக வெளிவரும்

ஐப்பசி மாத மன்னா மறைக்கல்விச் சிறப்பிதழாக வெளிவரும். மறையாசிரியர்களும் மாணவர்களும் மறைக்கல்வி தொடர்பான தமது அனுபவங்களையும் ஆக்கங்களையும் ஐப்பசி 15ம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வைக்கவும் (ஆ-ர்)

## மறைக்கல்வி தேர்வு

ஆண்டுதோறும் நடைபெறும் பாடசாலை மறைக்கல்வித் தேர்வு இவ்வருடமும் கார்த்திகை மாதம் 11 ஆம் திகதி நடைபெறும் என்பதை திருமறைப் பணி நிலைய இயக்குநர் அருட்பணி டெஸ்மன் குலாஸ் அடிகளார் தெரிவிக்கின்றார்.

## மறையாசிரியர் தேர்வு 1, 2, 3

மேற்படி மறையாசிரியர்களுக்கான தேர்வுகள் 18 கார்த்திகை 2000 அன்று சனிக்கிழமை மன்னார், மடு, வவுனியா ஆகிய தேர்வு நிலையங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை இடம்பெறும்.

### திருமறைப் பணி நிலையத்தின் ஏற்பாட்டில்

## !பிலி ஆண்டிற்கான நற்கருணை சிறப்பு நிகழ்வுகள்

நற்கருணை வாழ்வை மையப்படுத்திய நாடகப் போட்டி பீடப்பணியாளர்களுக்கு இடையில் இடம் பெறும். வேதாகம வசனத்தை மையப்படுத்தியதாக மறை ஆசிரியர் சித்திரம் வரைவர். அவை சித்திரக் கண்காட்சியில் இடம்பெறும். 7ஆம், 8ஆம் ஆண்டு ஒரு பிரிவாகவும் 9ஆம் 10 ஆம் அண்டு வேறு ஒரு பிரிவாகவும் 100 வசனங்களைக் கொண்ட வேதாகம வசனங்கள் மனனம் செய்யும் போட்டி இடம்பெறும். இப்போட்டி முதலில் மறைக்கல்வி வாரத்தில் பங்குகளில் நடைபெற்று நேரடியாக மறை மாவட்ட மட்டத்தில் கிறிஸ்மஸ் விடுமுறையின் போது இடம்பெறும்.

## அன்பான வாசகர்களே

உங்கள் பெற்றார் உற்றாரின் நினைவு அஞ்சலிகள். திருமண யூபிலி ஆண்டு நினைவுகள் போன்றவற்றை மன்னா தாங்கி வர இருக்கின்றது. சேவை அடிப்படையில் குறைந்த கட்டணத்தில் இம் முயற்சி ஆரம்பிக்கப்படுகின்றது. ஐம்பது சதுர சென்ரி மீற்றர் அளவுள்ள அறிவித்தல்களுக்கு ரூபா 500 கட்டணமாக அறவிடப்படும். நிழற்படங்கள் தந்தால் பிரசுரிக்கப்டும். அந்நிழற்படங்களை மீண்டும் உங்கள் முகவரிக்கே அனுப்பி வைப்போம். உங்கள் பணத்தை நேரடியாகவே மன்னா பணியகத்தில் கையளிக்கலாம். அல்லது, காசுக்கட்டளையாக தபாலிலும் அனுப்பி வைக்கலாம். எந்த மாத மன்னாவில் உங்கள் அறிவித்தல் இடம் பெற வேண்டும் என விரும்புகின்றீர்களோ அந்த மாதத்திற்கு முன்னைய மாதத்தில் உங்கள் அறிவித்தல் எமக்கு கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும்.

*நன்றி* *ஆசிரியர்*

### பத்து வருடங்களுக்குப் பின்னர்

## முள்ளிக் குளத்து மக்கள் தமது ஆலயத் திருவிழாவைக் கொண்டாடினர்

ஆவணி 26ந் திகதி முள்ளிக் குளம் மக்கள் தமது ஊர்ப்பாதுகாவலியகிய பரலோக மாதாவின் திருவழாவைத் தமது சொந்த ஊராகிய முள்ளிக் குளத்தில் கொண்டாடினார்கள். கடந்த 10 வருடங்களாக பல்வேறு இடங்களிலும் இடம்பெயர்ந்து பல நெருக்கடிகள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் முள்ளிக் குளத்து மக்கள் தமது ஊர் மற்றும் ஆலயத்திற்கு எப்போது திரும்புவோம் என்ற ஆதங்கத்தோடு வாழ்ந்து வருகின்றார்கள். கடந்த 10 வருடங்களாக தடைசெய்யப்பட்ட இடமாக -மக்கள் குடியிருக்காத நிலையில் அடர்ந்த காட்டுப் பகுதியாக மாறியுள்ள இக்கிராமத்தில் இவ்வாண்டு தமது ஆலயத்திருவிழாவைக் கொண்டாட இம்மக்கள் தீர்மானித்து அரிப்பு பங்குத் தந்தை அருட பணி. யூட் குரூஸ் தலைமையில் முயற்சிகளை மேற்கொண்டார்கள். தமது சொந்த மண்ணில் ஓரிரு நாட்களாயினும் தங்கியிருக்க வேண்டும் என்ற ஆசையினால் மூன்று நாட்களுக்கு முன்னரே தத்தமது வீடுகளுக்குச் சென்று தமது வீட்டு வளவைத் துப்பரவு செய்து தமது ஆலயத் திருவிழாவைக் கொண்டாடித் திரும்பினார்கள். பல்வேறு இடங்களில் சிதறுண்டு வாழும் முள்ளிக் குளத்து மக்கள் இத்திருவிழாவின்போது தமது பரலோக அன்னையின் ஒரே நிழலில் ஒன்று கூடினார்கள். திருநாள் திருப்பலியை மன்னார் மறைமாவட்ட நிதியாளர் அருட் பணி. நவரெட்னம் அடிகளார் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார்.

## வாங்க சிரிக்கலாம்

### மூன்றாவது ஆள் வேண்டுமே

ஒரு ஊரில் இரண்டே பெண்கள் மட்டுமே இருந்தனர். அவர்கள் பொழுது போகவில்லையே என்று குறைபபட்டுக் கொண்டே இருந்தனர். ஒரு பெரியவர் "நீங்கள்தான் இரண்டு பேர் இருக்கிறீர்களே ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டே பொழுதைப் போக்கக் கூடாதா" என்று அவர்களிடம் கேட்டார்.
அதற்கு அவர்கள் சொன்ன பதில் "நாங்கள் இருவர் மட்டுமே இருந்தால் பேசுவதற்கு என்ன இருக்கிறது மூன்றாவதாக ஒருத்தி இருந்தாலல்லவா அவளைப் பற்றி நாங்கள் பேசமுடியும்".

### எப்படிக் கண்டு பிடிச்சீங்க....?

ஒருவர் "உங்க மனைவி புதுசா எடுத்த புடவையில் சாயம் போகுதா"
மற்றவர் "என்ன ஆச்சரியம் எப்படி கண்டு பிடிச்சிங்க"
ஒருவர் "உங்க கையெல்லாம் சாயமா இருக்கே"

### சந்திரனுக்கு பயணம்...!

பைத்தியம் 1 "நான் நாளைக்கு சந்திரனுக்கு போகலாம்னு இருக்கிறேன்."
பைத்தியம் 2 "நான் சைக்கிள் கொடுத்தால்தானே நீ போவா"

# மனப் பொழிவு

## ஆசிரியர் ஆசிப்பது

வணக்கம்

### அன்பிய வாழ்வு புதிய திசை நோக்கிய

# நெடிய பயணம்

### நமது கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படைகள்

நீண்ட நெடுங்காலமாகவே நமது கிறிஸ்தவ வாழ்க்கை கத்தோலிக்கப் பாடசாலைகளையும் பங்குக் கோவில்களையும் சுற்றிப் படர்ந்ததாகவே அமைந்திருந்தது. நவ நாட்கள், ஆலய விழாக்கள், யாத்திரைத்தலங்களுக்கு செல்லுதல், பங்குத் தளங்களில் உள்ள பக்திச் சபைகள் ஆகிய அனைத்தும் நமது கிறிஸ்தவ சமூக வாழ்வுக்கு பங்களிப்பை நல்கின. மேற்சொன்ன விடயங்கள் அன்று அர்த்தமுடையனவாக இருந்தன. எதிர்காலத்திலும் அவை கிறிஸ்தவ வாழ்க்கையில் சுமாரான தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளாக தொடர்ந்தும் இருக்கும்.

### புதிய சவால்களும் புதிய சிந்தனைகளும்

எவ்வாறாயினும் மாறிவரும் சூழ்நிலைகளுக்கும் புதிய சவால்களுக்கும் இசைவாக புதிய சிந்தனைகளும் இசைவாக்கங்களும் வேண்டப்படுகின்றன. விரைந்து கொண்டிருக்கும் வாழ்க்கை முறைகளும் யுத்தகால நெருக்கடிகளும் குடும்பப் பிளவுகளும் வாழ்க்கைத் தேவைகளும் ரியூசன் அலையில் சுழலும் மாணவ சமுதாயமும் தொடர்பு சாதனங்களின் தீவிரப் பிரச்சாரங்களும் பாரம்பரியமான கிறிஸ்தவ விசுவாசத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. எனவே நாம் நவநாட்கள் திருவிழாக்கள் யாத்திரைகள் என்பவற்றை மட்டும் மையப்படுத்திய கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்ந்து திருப்திப்பட முடியாது. புதிய சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் புதிய சிந்தனைகள் வேண்டப்படுகின்றன. இந்தப் புதிய சிந்தனையின் வெளிப்பாடே அன்பிய வாழ்க்கை முறையாகும்.

### அன்பியம் - புரியாத புதிரா.....?

அன்பியம் என்ற வார்த்தை இன்று மன்னார் மறை மாவட்டத்தின் அனைத்து மூலை முடுக்குகளிலும் எதிரொலிக்கும் ஒரு புதிய வார்த்தைப் பிரயோகமாகும். "அன்பியம்" என்ற வார்த்தை இன்றும் சிலருக்குப் புரியாத புதிராகவே இருக்கின்றது. அன்பியம் என்றால் பத்துப் பதினைந்து குடும்பங்கள் கூடி ஒரு சிறிய வழிபாடு வைப்பதுதான் என்று அன்பியம் பற்றிய பரந்த பார்வையை ஒரு சிறிய செயற்பாட்டுக்குள் அடக்கி விட நினைக்கின்றனர். இது அன்பியம் பற்றிய அறியாமையின் ஒரு வெளிப்பாடே. அன்பியம் என்பது வழிபாடு அல்ல. அது ஒரு வாழ்க்கை முறை. அன்பின் நாகரீகத்தில் கட்டப்படுகின்ற உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கை முறை.

### அன்பியத்தின் வேர்களைத் தேடி

இலத்தீன் அமரிக்க நாடுகளில் ஏற்பட்ட அரசியல் பொருளாதார தாக்கங்களில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ள அந்நாட்டுத் திருச்சபைகள் தமது இறை மக்களை சிறிய குழுக்களாக ஒன்று கூட்டி இறைவார்த்தையை வாசித்துப் பகிர்ந்து உறவாடி தம்மிடையே இருந்த அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தனர். இவ்வாழ்க்கை முறையானது திருத்தூதர் பணிகள் 2 ஆம் அதிகாரம் 42 ஆம் திருவசனத்தில் கூறப்பட்டுள்ள தொடக்க கால திருச்சபையினரின் வாழ்க்கை முறையை அடியொற்றியதாகும். இதுவே அன்பியத்தின் வேராகும்.

### தொடக்ககால திருச்சபையினர்

1 திருத்தூதர் கற்பித்தவற்றிலும் (இறைவார்த்தையை கேட்பதிலும்)
2 நட்புறவிலும் (பகைமையை மறந்து உறவாடுவதிலும்)
3 அப்பம் பிட்குதலிலும் (தமக்குள்ளதைப் பகிர்வதிலும்)
4 இறை வேண்டலிலும் (கூடிச் செபிப்பதிலும்)
உறுதியாய் நிலைத்திருந்தார்கள்.

மேற்கூறப்பட்ட நான்கு வாழ்க்கை அம்சங்களையும் வாழுகின்ற வாழ்வே அன்பிய வாழ்வாகும். கிறிஸ்தவத்தின் ஊற்றுக்கு சென்று தொடக்க காலத் திருச்சபையினரின் வாழ்க்கை முறையை ஆராய்ந்து அதை வாழ்வாக்க அனைவரும் அழைக்கப்படுகின்றார்கள். வெறும் பார்வையாளர்களாக அல்லாமல் நாம் அனைவரும் பங்காளர்களாக மாறுவோமா?

*மறுமடலில் சந்திக்கும் வரை*
*உங்கள் அனைவருக்கும் இறை ஆசீர்*
*அருட்பணியாளர் நேசன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசித் திங்கள் 6ம நாள் அனைத்துலக ஆசிரியர் தினம்

**புனித டிலாசால் புனிதராகப் பிரகடனப் படுத்தப்ட்ட நூறு ஆண்டுகள் நிறைவையும், கிறிஸ்தவ ஆசிரியர்களின் பாதுகாவலராக பிரகடனப் படுத்தப்பட்ட ஐம்பது ஆண்டு நிறைவையுமொட்டி இச் சிறப்புக் கட்டுரை பிரசுரமாகின்றது**

# பாடசாலை ஆசிரியர் ஒருவருக்கு இருக்க வேண்டிய பன்னிரு குணவயல்புகள்

*ஆங்கில மூலம - மன்னார் மண்ணின கலவியாளர்களுள் ஒருவரான அருட சகோதரர் கலாநிதி பபரிஸ குருஸ. தமிழ வடிவம - அருட சகோதரி கனிசியஸ.- தி.கு*

ஐபபசித திஙகள 06 ம நாள அனைததுலக ஆசிரியர் தினம. உலகளாவிய ரிதியில இததினம விமரிசையாக கொணடாடபபடுகினறது. தம நிலை தளமபாது, தாம நினற இடததிலேயே நினறுகொணடு, தம கழ கலவி பயிலும மாணவர்களுககு ஏணிகளாக, படிககறகளாக மெழுகுவர்ததிகளாகத திகழும ஆசிரியர்களுககு எமது வாழததுககள. அததுடன மனனார் மணணின கலவிப பாரமபரியததில ஆழக கால பதிதது அருமபணி ஆறறி வரும டிலாசால சபைச சகோதரர்கள தமது நிறுவுனரான புனித ஜோன பபரிஸ டிலாசால புனிதராகப பிரகடனபபடுததபபடட நூறறாணடு நிறைவு விழாவையும கிறிஸதவ ஆசிரியர்களின பாதுகாவலராகப பிரகடனபபடுததபபடட ஐமபதாவது ஆணடு நிறைவு விழாவையும இவவாணடு கொணடாடபபடுகினறனர். இவவேளையில எமது வாழததுககளையும செபஙகளையும இவர்களுககு கூறி நிறகினறோம. புனித டிலாசால கிறிஸதவ ஆசிரியர்களுககு அளிததுள்ள பனனிரு பொனமொழிகளை எம ஆசிரியப பெருநதகைகளுககு அனபோடு அர்பபணிககினறோம (ஆ-ர்)

டிலாசால் சபைச்சகோதரரின் நிறுவுனரான புனித டிலாசால் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்ட நூற்றாண்டு நிறைவு இவ்வருடம் ஆகும். புனித டிலாசால் 1651 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 30 ஆம் நாள் றெயிம்ஸ் பிரான்சில் பிறந்து 1719 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 7 ஆம் நாள் இறைபதம் சேர்ந்தார். இவரது முதலாவது கல்விச்சாலை 1680 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. டிலாசால் சபைச் சகோதரர்கள் 320 ஆண்டுகளாகக் கல்விப் பணியில் ஈடுபட்டு வருகின்றார்கள் என்றால் அது குறிப்பிடக் கூடிய சாதனையே ஆகும். இலங்கை உட்பட உலகளாவிய ரீதியில் 80 நாடுகளில் 6500 டிலாசால் சகோதரர்கள் பணியாற்றுகின்றார்கள். (அவர்கள் தமது பெயரின் பின்னால் குறிப்பிடும் எப்.எஸ்.சி. என்பது இலத்தின் மொழியினாலான **Fratres Scholarum Christianarum** என்பதாகும். “கிறிஸ்தவ பாடசாலைகளின் சகோதரர்கள்” டிலாசால் சகோதரர்கள் என்பது யாவரும் அறிந்ததே. 1950 ஆம் ஆண்டு பரி. தந்தை 12 ஆம் பத்திநாதரினால் புனித யோண் பப்ரிஸ் கிறிஸ்தவ ஆசிரியர்களின் பாதுகாவலராக பிரகடனப்படுத்தப்பட்டார். புனித டிலாசால் தான் வாழ்ந்த காலத்தில் பாடசாலை முகாமைத்துவம் ஆசிரியர், மாணவர் உறவு ஆகியவை பற்றி விரிவாக எழுதியுள்ளதோடு தனக்குப் பின் வருபவர்களுக்கென கிறிஸ்தவக் கல்வியைப் பற்றி மிகவும் நேர்த்தியான கட்டுரைகளையும் எழுதியுள்ளார். பு னித டிலாசால் பாடசாலை ஆசிரியளர்களுக்கென முன்மொழிந்த பன்னிரு குணவியல்புகள் இன்றைய மின்யுகத்திலும் யாவருக்கும் மிகவும் பொருத்தமானவை. எனவே இதனை யாவரும் புரிந்து கொள்ளக் கூடிய விதத்தில் இங்கு தருகின்றேன்.

## 01) அறிவுடைமை

அறிவுடைமை என்பது ஆசிரியர் ஒருவர் தனது பேச்சுக்கள் கருத்துக்களில் அதிகளவான தப்பபிப்பராயங்களையும் பகைமையையும் தவிர்ப்பதற்கு உதவும் உயர்ந்த குணவியல்பாகும். அவர் மாணவருடனோ, பெற்றோருடனோ அன்றேல் தன்னுடன் இணைந்து பணியாற்றுபவர்களுடனோ தொடர்பு கொள்ளும்போது யாவருக்கும் நன்மை பயக்கும் வகையில் அறிவுடைமையைக் கையாள வேண்டும். நம்பிக்கைக்குரிய விடயங்களில் மிக உயர்ந்த அறிவுடைமையுடன் கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் ஆசிரியரின் மதிப்பையும் நம்பகத்தன்மையையும் எடுத்துக் காட்டுவன அவைகளே.

## 02) தாராள குணம்.

ஆசிரியர் அறிவைப் பகிர்வதில் மிகவும் தாராள குணம் நிறைந்தவராயிருத்தல் வேண்டும். ஒரு பாடத்தைப் பற்றி தனக்குக் தெரிந்தவை யாவற்றையும் மாணவருக்கு விளங்கத் தக்கதான முறையில் தெளிவாகவும் திட்டமாகவும் கற்பிக்க வேண்டும். தனது ஒழுக்கம் கட்டுப்பாட்டில் உன்னத நிலையில் இருந்து கொண்டு தனது நுட்பங்களை திறமைகளை ஆற்றல்களை மாணவர்களின் நலனுக்காகவும் நாட்டுக்குகந்த நற் பிரஜைகளாக அவர்களை உருவாக்குவதற்காககவும் பயன் படுத்த வேண்டும். மாணவர் தமது அறியாமையினாலோ அன்றேல் மனித பெலவீனத்தினாலோ் ஏதாவது தவறு செய்யும் போது அவர்களுக்கு மன்னிப்பு வழங்குவதில் ஆசிரியர் மிகுந்த தாராள குணம் உடையவராயிருத்தல் வேண்டும்.

## 03) ஈர்க்கும் சக்தி

ஆசிரியரின் இசைந்து போகும் தன்மையும் சீரிய நிலையும் வகுப்பில் அவரது தரத்தையும் மதிப்பையும் அதிகரிக்கும். வகுப்பறையில் அவரின் ஒருவித கடுமையான தோற்றம் மாணவர்கள் பாடத்தின் மட்டில் தம் கவனத்தை ஒருமுனைப் படுத்துவதற்கும் அவதானிப்பதற்கும் மறுபடி நினைவு படுத்திக் கொள்வதற்கும் உதவியிருக்கும். ஈர்க்கும் சக்தியானது மாணவரது நல்லொழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் நிலை நாட்ட உதவும். அதே வேளை ஆசிரியரும் சகல மாணவரினதும் விசேடமாக பின்தங்கிய மாணவரினதும் நன்நடத்தையில் கூடிய முறையில் கவனம் செலுத்தவும் முடியும். தகுதியானதொரு வகுப்பறைச் சூழல் ஆசிரியருக்கும் மாணவருக்கும் கற்பிப்பதற்கும், கற்பதற்கும் ஏற்றதாயமையும். ஆகவே ஈர்க்கும் சக்தி பாடசாலை முகாமைத்துவத்திற்கு மிகவும் தேவையானதொரு குணவியல்பாகும்.

## 04) தாழ்ச்சி

உயர்ச்சியானது தாழ்ச்சியில் தங்கி உள்ளது. உயர்ந்த மனிதர் தாழ்மையான மனிதர் என்று கூறுவார்கள். ஆசிரியருக்கு தனது மாணவர் ஒருவரால் எழுப்பப்பட்ட வினாவுக்குரிய விடை தெரியாதவிடத்து “என்னை மன்னிக்கவும் இதற்குரிய விடை




*புனித ஜோன் பப்ரிஸ்ற் டிலாசால்*

எனக்கு தெரியாது, ஆனால் ஆராய்ந்து கூறுகின்றேன். அன்றேல் என் உடன் ஆசிரியர்களிடம் கேட்டுச் சொல்கின்றேன்” என்று கூறக்கூடிய தாழ்ச்சி அவரிடம் காணப்படல் வேண்டும். சமுத்திரத்தை போன்ற பரந்த அறிவு இருக்கலாம். ஆனால் வானத்தின் கீழுள்ள அனைத்திற்கும் விடை தெரிந்திருப்பது என்பது இயலாத காரியம். தாழ்ச்சியில் மிகவும் மேலானது யாதெனில் ஆசிரியர் ஒருவர் தன் வாழ்நாள் முழுவதுமே மாணவராயிருப்பதுதான். அதாவது வாழ்வுபூராவும் கல்வி சம்மந்தமான தேடலில் அவர் ஈடுபட வேண்டும்.

## 05) சாந்தம்

நான் சாந்தமும் மனத் தாழ்ச்சியும் உள்ளவனாயிருக்கின்றேன் என்னிடம் கற்றுக் கொள்ளுங்கள். “(மத்.11:29) என்று இயேசு கூறியுள்ளார். சாந்தம் அன்றேல் தயை என்னும் குணவியல்பு ஒருவர் ஒருவரை அன்பினால் பிணைக்கின்றது. தம்முடன் சாந்தமாகப் பழகும் ஆசிரியரை மாணவர்கள் உயர்வாக மதித்து அன்பு செய்வார்கள். மாணவர்கள் முரட்டுத் தனமான பண்பற்ற சுற்றுப் புறச் சூழலில் இருந்து வரலாம். அங்கு அவர்கள் குரூரமான வார்த்தைப் பிரயோகங்களையும் சபித்தல் திட்டுதல் போன்றவற்றையும் காதில் வாங்கிக் கொள்ளலாம். கடைசி பாடசாலையிலாவது அவர்கள் அன்பான ஆசிரியர்களின் வழிநடத்தல்களின் கீழ் வரும்போது சாந்தம் தயை போன்ற குணவியல்புகள் மாணவருக்கு அளவிடற்கரிய நலன்களை விளைவிக்கும். சாந்தம் என்னும் போது அது பலவீனம் எனும் கருத்தை குறிப்பது அல்ல. “பாம்புகளைப் போல் விவேகமுள்ளவர்களையும் புறாக்களைப் போல் சாந்தமுள்ளவர்களாயுமிருங்கள்.” (மத். 10:16) என்று கிறிஸ்துவே தம் சீடருக்கு அறிவுரை வழங்கி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## 06) பொறுமை

“யோபுவைப் போன்று பொறுமையுமுள்ளவராயிருங்கள்.” எனும் உவமை யாவருக்கும் தெரிந்ததே. தான் எடுத்துக் கொண்ட விடயத்தை தெளிவுற விபரிப்பதற்கும் அத்துடன் சிறுவர் இளைஞரது குறும்புத்தனங்கள் குழப்படிகளைச் சகித்துக் கொள்வதற்கும் ஆசிரியருக்கு அளவிடற்கரிய பொறுமை தேவை. வளர்ச்சிப் பருவத்தில் காலடி வைக்கும் அவர்கள் அடிக்கடி மாறும் குணமுடையவர்களாயிருப்பர். அத்தகைய பருவம்தான் மாணவர்கள் தமக்குள் அழுத்தி வைக்கப்பட்டிருக்கின்ற சக்திகளை வெளிக் கொணரும் பருவம். எனவே வகுப்பறைச் சூழல் காத்திரமான முறையில் குழப்பமடையாத விடத்து ஆசிரியர் அளவுக்கதிகமாக உணர்ச்சிவசப்படவோ விமர்சனம் செய்யவோ வேண்டிய தேவையில்லை. அதே வேளை எந்த நிலையிலும் முரட்டுத் தனமான செயற்பாடுகளுக்கும் இடம் கொடுக்கக் கூடாது. ஏனென்றால் அவை ஆபத்தான நிலைப் பாட்டடிற்கு வழி செய்வதோடு ஒரு சில மாணவர் வரம்பு மீறிச் செல்லவும் வழி கோலும். எல்லா வகையான முரட்டுத் தனங்களையும் கண்டனம் செய்யும் அதே வேளை, ஒரு ஆசிரியர் மாணவர்களின் குறைகளையும் அறியாமைகளையும் விளங்கிப் பொறுமையைக் கடைப் .பிடிப்பதோடு சிறிது கடினமாகச் செயற்படும்படி அவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும். இயற்கையாகவே பொறுமை நற்கனிகளைப் பிறப்பிக்கும்.

## 07) தெய்வ பக்தி;

ஆசிரியரில் காணப்படும் ஒருவித தெய்வீக ஞானமானது நற் குணங்களையும் விழுமியங்களையும் மாணவர் மனதில் நன்கு பதியச் செய்ய உதவும். ஞானத்தின் தொடக்கம் தெய்வ பயம் (சீராக் 1:14) என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. மற்றொரு வகையில் கூறுவோமானால் தெய்வ பக்தியும் தெய்வீக அன்பும் மாணவர் சரியான பாதையில் காலடி எடுத்து வைக்க உதவி புரியும். அவர்கள் நன்றி உணர்வால் ஊடுருவப்படுவர். எனவே அசிரியரது மறைவாழ்வு தெய்வ பக்தி ஆகியவை திருப்தி கரமாயிருக்கும் பொழுது மா ணவர் களும் அவற்றைப் பின்பற்றுவர்.

## 08) விவேகம்

விவேகம் வீரத்தின் தலை சிறந்த பாகம் என்பது அடிக்கடி கூறப்படும் பழமொழியாகும். சரியான விதத்தில் தீர்மானிப்பதற்கும் அதற்கேற்ப செயற்படுவதற்ம் உரிய திறமையே விவேகம். தெளிவான மனநிலைக்கும் விமர்சன சிந்தனைக்கும் நியாயமான தீர்மானம் எடுத்தலுக்கும் விவேகம் இன்றியமையாதது. மாணவர்கள் தமக்களிக்கப்பட்ட மிகப் பெரிய அநீதியை ஒரு பொழுதும் மறக்க மாட்டார்கள். அத்துடன் அது பகைமைக்கும். சில சமயம் பழிவாங்கலுக்கும் வழி செய்யும். ஆகவே, ஒருவர் தனது போச்சுவார்த்தை பிரயோகங்கள் தீர்மானங்கள் செயற்பாடுகள் யாவற்றிலும் விவேகத்தைக் கடைப்பிடிப்பது மிக அவசியம்.

## 09) அமைதி

“பேச்சு வெள்ளியைப் போன்றது. ஆனால் அமைதி தங்கத்தைப் போன்றது.” என அடிக்கடி கூறப்படும் இம் மேற்கோள் எமது சிந்தனைக்கான அதி சிறந்த ஆகாரமாகும். நான் ஒரு தடவை நகைச் சுவை மிக்க ஆனால் சிந்தனையை தூண்டுகின்ற துணுக்கு ஒன்றை வாசித்தேன். அதாவது அமைதியாய் இருந்து முட்டாள் என்று பெயர் எடுப்பது வாய் திறந்து எல்லா வித சந்தேகங்களையும் வெயிடுவதை விட மேலானது. இங்கு குறிப்பிடப்படுவது யாதெனில் ஒரு ஆசிரியர் வாய் ஓயாது அர்த்தமற்ற பேச்சு பேசுபவராக இருத்தல் விரும்பத்தக்கதல்ல. மாறாக வகுப்பறையில் அதிக வேலைகள் இல்லாத போதும் அடக்கமாக அமைதியாக இருத்தல் வேண்டும். அமைதியான நீர் ஆழமாக ஓடும் என்பது தெரிந்ததே. அமைதியின் சக்திகள் ஒரு ஆசிரியருக்கு மிகுந்த வெகுமதிகளை அளிக்கும்.

## 10) விழிப்புணர்வு

மாணவர்கள் பாடசாலையில் இருக்கும் வரை ஆசிரியர்கள் அவர்களின் பாதுகாவலராகவோ பெற்றோராகவோ செயற்படுவதால் ஒவ்வொரு ஆசிரியருக்கும் விழிப்புணர்வு தேவை. ஆசிரியர்களின் கரங்களில் மாணவர்கள் மிகுந்த விலைமதிப்பிற்குரியவர்கள். தவிர, இடை வேளையில் அவர்கள் ஏதாவது விளையாட்டில் ஈடுபடும்போதோ அன்றேல் பாடத்திட்டத்திற்கு புறம்பான செயற்பாடுகளில் ஈடுபடும் போதோ உடல் ரீதியான பாதிப்புக்கு உள்ளாகலாம். மனம் சார்ந்த உணர்ச்சி சம்மந்தமான தீர்வுகளுக்கு உட்பட்டு வாழ்நாள் முழுவதுமே அவர்களது கல்வி பாதிக்கப்படாத வகையில் விழிப்புடன் இருக்க வேண்டும். அன்றியும் ஆசிரியர்கள் மாணவர்களின் காவற் தூதர்களாக இருந்து செயற்படுவதோடு அவர்களது முழுமையான மனத்தோற்றத்தில் தொடர்ச்சியான கவனம் செலுத்துபவர்களாகவும் இருக்க வேண்டும்.

## 11) ஞானம்

பரிசுத்த ஆவியின் கொடைகளில் முதலாவது கொடை ஞானம். யாவற்றிற்கும் மேலாக ஆசிரியர்கள் இளம் சந்ததியினரின் தலைவர்களாக வழிகாட்டிகளாக ஊக்கமூட்டுபவர்களாக இருப்பதால் அனைத்து ஆசிரியர்களும் ஞானத்தைப் பற்றிப் படிப்பித்துக் கொள்ள வேண்டும். வரும் காலம் ஆசிரியர்களின் கரங்களில்தான் தங்கியுள்ளது. மாணவர்களின் தன்மையில் இருந்து ஆசிரியரின் தரத்தை அறியலாம். “சரியான தகுதியடையவர்களாலேயே சரியான தகுதியுடைய பொருட்களை உற்பத்தி செய்ய முடியும்” என்ற எடுகோள் ஒன்று உண்டு. அறிவு நிறைந்த ஆசிரியர் அறிவு நிறைந்த மாணவரை உருவாக்க முடியும். நல்ல மாணவர்களை உருவாக்குவதற்கும் வளர்ச்சிப் படிகளில் அவர்களை வழி நடாத்திச் செல்வதற்குமான சகல முயற்சிகளையும் மேற்கொள்வதற்கு ஆசிரியர்களுக்குத் தேவையான குணவியல்பே ஞானம். ஸ்பெயின் தேசத்தைச் சேர்ந்த புனிதையான அவிலா திரேசா கூறுவது “ஆண்டவரே என்னால் மாற்ற முடியாதவற்றை ஏற்றுக் கொள்வதற்கான அமைதியைத் தாரும். என்னால் மாற்றக் கூடியவற்றை மாற்றுவதற்கான தைரியத்தையும் இரண்டிற்கும் இடையிலான வேறுபாட்டைக் கண்டறிவதற்கான ஞானத்தையும் எனக்குத் தாரும்”.

## 12) ஆர்வம்

ஆர்வம் என்பது ஒரு பாடத்தைப் பற்றி ஆசிரியருக்குத் தெரிந்தவற்றை தெளிவாக விளங்கக்கூடிய முறையில் மாணவருக்கு அளிக்கும் ஊக்கம் மிக்க நிலைப்பாடு ஆகும். முக்கியமான செயற்பாடுகளையும் தகவல்களையும் சேகரித்து பாடத்தைத் திட்டமிட்டு மாணவருக்கு அளிப்பதில் ஒரு ஆசிரியர் மிகுந்த சிரத்தை உள்ளவராகவும் மனதில் பதிய வைப்பவராகவும் மாணவரின் ஆர்வத்தைத் தூண்டுபவராகவும் இருக்க வேண்டும். ஆனால் தீவிர ஆசை ஒரு மாணவனை கர்வம் அடையும் நிலைக்கு இட்டுச் செல்ல முடியும். எனவே ஆசிரியர்கள் மாணவர்களை ஒழுக்கத்திலும் ஆன்மீகத்திலும் உருவாக்க ஆர்வம் உள்ளவராய் இருக்க வேண்டும். அப்படியானால் அவர்கள் சரியான பாதையில் அடியெடுத்து வைத்து நடப்பார்கள். இந்த அபிலாசை ஆர்வம் ஊக்கம் ஆகியவை ஆசிரியரது ஆழுமையின் ஒரு பாகமாகும். “ஞானிகள் வானத்தின் ஒளி போலவும் பலரை நல்வழியில் திருப்பியவர்கள் விண்மீன்களைப் போலவும் என்றென்றும் முடிவில்லாக் காலத்திற்கும் பட்டொளி வீசுவார்கள்” (தானி 12:3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பொழில்

## உங்களுக்குத் தெரியுமா?

**முதல் வானொலிச் செய்தி**

உலகின் முதல் வானொலி நிலையம் கனடாவில் தொடங்கி வைக்கப்பட்ட பொழுது ஒலிபரப்பப்பட்ட முதல் வானொலிச் செய்தி லூக்காஸ் நற்செய்தியின் கிறிஸ்து இயேசுவின் பிறப்புச் செய்தியாகும்.

**முதல் விண் வெளிச் செய்தி**

விண்வெளியில் பறக்கக் கற்றுக் கொண்ட மனிதன் அங்கிருந்து பூமிக்கு அனுப்பிய முதல் விண்வெளிச் செய்தி விவிலியத்தின் முதல் புத்தகம் முதல் அதிகாரம் முதல் வசனம் ஆதியாகமம் 1:1 ல் உள்ள வார்த்தை

**கோர்ப்பேச்சேவும் கடவுள் நம்பிக்கையும்.**

அணு ஆயுதக் குறைப்பு உடன்பாட்டுக்கான உச்சக் கட்டப் பேச்சு வார்த்தைக்கு அமெரிக்கா சென்றிருந்த முன்னாள் ரஸ்ய அதிபர் கோர்ப்பேச்சேவ் பேச்சுவார்த்தை தொடங்கிய பொழுது "God Will Help Us" "கடவுள் நமக்கு உதவி யெ்வாராக" என்று தனது நம்பிக்கையை வெளியிட்டார்.

*ஆர்.எஸ். சுரேஸ் பெர்னாண்டோ*
*ஆஸ்பத்திரி வீதி, சின்னக்கடை*
*மன்னார்.*

## சிறுவர் தொடர் கதை

# புனித சியன்னா கத்தரீன

**அங்கம் 5**

**15**

கத்தரீன் வாழ விரும்பியது, வாழ முயன்றது, துறவு வாழ்வு. ஆனால் மற்றவர்கள் அவ்வளவு எளிதில் விட்டுவிடுவார்களா? எனவே, அவளை மணம் செய்து கொள்ள பலர் விரும்பினர். அவள் ஏன் இவ்வளவு தூரம் இல்லற வாழ்வை நீக்கி துறவு வாழ்வை மேற்கொண்டாள் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் "நான் ஏற்கனவே முடிவு செய்து விட்டேன். இறைவனாகிய இயேசுவுக்கு என்றும் நான் அடிமை. எனவே, எல்லோரும் என்னை விட்டு விடுங்கள்" எனக் கூறுகின்றாள்.

**16**

மனிதர்கள் அவளை விட்டுவிட்டாலும் தீயவனாகிய அலகை சும்மா இருப்பானா? பலவிதமாக அவள் மனதைக் கெடுக்க முயலுகின்றான். "நீயோ மிகவும் அழகுள்ளவள் ஆயிற்றே. உன்னை பலபேர் மணம்புரிய விரும்புகின்றார்களே, அப்படி இருக்க திருமணம் செய்து கொண்டு உலக இன்பங்களை நீ அனுபவிக்லாமன்றோ? அதை விட்டுவிட்டுத் தன்னந்தனியே இந்த நான்கு சுவர்களுக்குள்ளே வாழ்ந்து சமாதியாகப் போகிறாயா?" என்றெல்லாம் அவளது உள உறுதியைக் கெடுக்கப் பார்க்கின்றான் தீயவனாகிய அலகை. கத்தரின் அதற்கெல்லாம் இணங்கி விடுவாளா? "போ அப்பாலே சாத்தானே நான் இறைவனாகிய இயேசுவுக்கு மட்டுமே சொந்தமானவள்" என்று கூறி அலகையை விரட்டுகின்றாள்.

**17**

பின்னர் கத்தரீன் இயேசுவோடு உரையாடிக்கொண்டிருக்கும்பொழுது, "அலகையினால் மிகவும் சோதிக்கப்பட்டேனே அப்போது நீங்கள் எங்கே இருந்தீர்கள்?." என உளமுருகிக் கேட்கின்றாள். அதற்கு இயேசு, "உன் உள்ளத்தின் ஆழத்தில்தான் இருந்தேன். ஆம், என்னை உண்மையிலேயே அன்பு செய்பவர்களை நான் ஒரு போதும் கை விடுவதில்லை" என்ற உண்மையைக் கூறுகின்றார்.

**18**

இவ்வாறு சோதனைகளாலும் துன்ப துயர வருத்தங்களாலும் புடமிடப்பட்ட கத்தரீன் தங்கம் போல் ஒளி வீசி இறைப்பணி ஆற்ற முன்வருகின்றாள். புனித லாசரஸ் இல்லத்தில் உள்ள தொழுநோய் பிணியாளர்களுக்கு பணிபுரியச் செல்கின்றாள். அங்கிருந்த நோயாளிகளின் நாற்றமடிக்கும் புண்களைக் கழுவி மருந்து தடவி உதவி புரியும் செவிலியாகப் பணி புரிகின்றாள்.

கத்தரின் தொடர்ந்தும் வருவாள்

# கவிதைப் பூக்கள்

## சமாதானம்

திருமறை வேதங்கள் தினமும் நாம் ஓதவே
தீந்தமிழில் இறை புகழ் தினமும் பாடவே
மனமாற்ற வாழ்வு எம்மில் உதிக்கவே
மாசற்ற அன்பு எம்மில் சிறக்கவே

இனமத பேதங்கள் இந் நாட்டில் நீங்கவே
ஏற்றமுடன் ஒற்றுமை எம் மண்ணில் மலரவே
மன நிறைவு மக்களிடை மலைபோல உயரவே
தேசமெங்கும் சமாதானம் தேன் பாய்ந்து ஓடவே

மண்ணுலக செல்வங்கள் தேய்பிறையாய் மறையவே
மனமாற்ற வாழ்வினால் இறைவனையே புகழவே
முடிவில்லா விளைநிலமாம் விண்ணுலகைத் தேடவே
முழுநிலவாய் சமாதானம் எமை வந்து சேரவே

*அ. கெவின்கரன், தரம் 09*
*மடுக்கோவில்*

## வேதாகமம்

சத்தியன் பாதை சொல்லும்
உத்தம புத்தகமே
மக்களை மக்களாக்கும்
மந்திரப் புத்தகமே
எத்திசை சென்றாலும்
எம்மதம் சார்ந்தாலும்
நீதியின் இருக்கையிலே
நின்றுலவும் புத்தகமே
நான் சொன்ன புத்தகம்
நம் மறையின் புத்தகம்
சத்தியம் சொல்ல வந்த
உத்தம வேதாகமமே

*டொ. கிறிஸ்ரினா*
*சாந்திபுரம், மன்னார்*

## சின்ன யேசுவே பதில் சொல்

சின்னச் சின்ன பாலகனே
சிந்தை நிறைந்த பாலகனே
சிட்டுக் காலால் நடந்து
பணிகள் பலவும் செய்து
பாவிகள் மனதை மாற்றி
பரகதி வாழ்வை அமைத்து
பரிசுத்தராக மாற்றி
பரலோகம் தன்னை தந்தீர்

அன்று நீர் பிறந்தீர் விமோசனம்
இன்று நாம் பிறந்தோம் சாபம்
எம்மைப் பார்த்து எம் பெற்றோர்
"ஏன் பிறந்தாய்" என்கின்றனர்
எம்மவர் நிலையைப் பாரும்
இது எப்போது தீரும்
சின்ன இயேசுவே?

அன்று உமது மந்தையில்
ஒரு ஆடு பிரிந்து போனது
இன்று உமது மந்தையில்
எத்தனை உயிர்கள்
அழிந்து போகுது?
இது எப்போது தீரும்
சின்ன இயேசுவே

*சி.ஆ.ஜென்சி குரூஸ்*
*தலைமன்னார்*

## சிறுகதை

# கண்ணீர்

அருளம்மா நடுநிசியில் விழித்துக் கொண்டாள். அவளது கணவன் வீட்டுக்கு வெளியே நின்று கதவைத் தட்டுவது போன்றும்(இதய) வீட்டுக்குள் வர விடை கேட்பதும் போன்ற ஒரு பிரமை. கண்களைக் கசக்கிப் பார்க்கின்றாள். நித்திரைதான் அவளுக்கு தூரமாயிற்றே. மூத்தவன் ஓர் அறையிலும். மற்றைய அறையில் இரு பெண்களும் நிம்மதியாகத் தூங்க இவள் மட்டும் தூங்குவதும் விழிப்பதுமாய் இருந்தாள். நித்திரை வருவதும் போவதுமாக அவளைச் சித்திரவதை செய்து கொண்டிருந்தது. வெளியில் இராப் பூச்சிகள் தங்களுக்கே உரித்தான சத்தங்களால் இருளின் கனாகனத்தை உணர்த்திக் கொண்டிருந்தன. அவளது உள்ளத்தையும் சில சிந்தனைப் பூச்சிகள் அரித்து அவளது உள்ளக் கனாகனத்தை உணர்த்திக் கொண்டிருந்தன. அருளம்மா மெல்ல எழுந்து மேசை விளக்கை தூண்டி விட்டு கட்டிலில் சாய்ந்து அமர்ந்து கொண்டாள். விளக்கின் மங்கிய ஒளியில் வீட்டின் ஒவ்வொரு பொருளையும் உற்றுப் பார்த்தாள். அவை அனைத்தும் தன்னாலும் தனது பிள்ளைகளின் கடும் முயற்சியினாலும் கொண்டு வரப்பட்டன என நினைத்து உள்ளூர பெருமைப்பட்டுக் கொண்டாலும் பொறுப்பற்ற கணவனை நினைத்து மனம் பொருமிக் கொண்டாள். அந்தப் பொறுப்பற்ற கணவன் நாளை வருகின்றானாம் என்ற செய்திதான் அவளை அரித்துக் கொண்டிருந்தது. "என் அப்பன் இங்க வந்தால் அவனுக்கு இரண்டு போட்டு துரத்தாமல் விடமாட்டன்" என்று அவளது மூத்த மகன் கொதித்தெழுந்ததும் அவளுக்கு தெரியாமலில்லை. அந்தப் பொறுப்பற்ற கணவனின் நிமித்தம் எத்தனை அவமதிப்புக்களையும் ஊராரின் வசை மொழிகளையும் தாங்கிக் கொண்டாள் என்பது அவளுக்கு மட்டும்தான் தெரியும் அப்படி அவன் என்னதான் குற்றம் செய்து விட்டான்? அருளம்மாவின் கண்கள் மேசை விளக்கின் சுடரில் நிலை குத்தி நிற்க அவளது நினைவலைகள் கடந்த காலத்தில் கால் வைத்தன.

**அருட் சகோ. விமல் அமதி**
**அம்பிட்டியா, கண்டி**

அருளம்மா அந்தக் காலத்தில் 'அருள்' என்கின்ற குறும் பெயரோடு துள்ளித் திரிந்தவள்தான். அவளது சுண்டி இழுக்கும் பார்வையும் தலை அசைவுகளும் உதட்டோரச் சிரிப்புக்கள் அனைத்தும் எவரையும் கவர்ந்திழுக்கும் காந்த சக்தி கொண்டவை. அவள் பின்னால் எத்தனையோ வாலிபர்கள் சுற்றினார்கள். அவள் யாருக்கும் மசியவில்லை. ஒருவனைத்தவிர. அவனையே பெற்றோரின் எதிர்ப்போடு காதல் திருமணம் செய்து கொண்டாள். அத்தோடு அவளது உறவு அவளது குடும்பத்தில் நின்று அறுந்து விட்டது.

திருமணம் முடிக்கும் வரை தன்னைப் பொறுப்பானவனாக காதல் நேரம் தவறாதவனாக கண்ணியமானவனாகக் காட்டிக் கொண்ட அவளது கணவன் திருமணத்தின் பிற்பாடு சினிமாக் கதாநாயகர்கள் போல தன் சுய ரூபத்தைக் காட்டத் தொடங்கினான். மூன்று பிள்ளைகளையும் பெறுவதில் இருந்த அவனது அவசரம் அவர்களை வளர்ப்பதில் குடும்பத்திற்ககாக உழைப்பதில் இருக்கவில்லை. கசிப்பு அவனது முழு நேர உணவாக, பானமாக மாறியது கள்ளத்தனமாக இரவில் சில வீடுகளுக்கு அவன் போய் வருவதும் அவளுக்கு தெரியாமலில்லை. அருளம்மாவோ கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன் என்கின்ற நிலையில் அவமானங்களைச் சகித்துக்கொண்டு மூன்று பிள்ளைகளுக்கும் உயிர் கொடுத்துக் கொண்டிருந்தாள். அவளது கணவனோ அவளதும் அவளது பிள்ளைகளினதும் உயிரை தனது சுடு சொற்களால் எடுத்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் அவளது செவிகளில் "உன் புருசன் சந்தி வீட்டு சாந்தியோட ஓடிப் போயிற்றானாம்" என்ற செய்தி இடியாக விழுந்தது. ஆனால் அவள் இடிந்து போகவில்லை. தொலைந்தது சனியன் என்று காலத்தோடு போராடி பிள்ளைகளை வளர்க்க திட சங்கற்பம் கொண்டாள். அவனை மறக்கத்தான் முயன்றாள். முடியவில்லையே! ஏதாவது சபை சந்திகளுக்கு எல்லோரும் குடும்பமாகப் போகும்போது இவள் மட்டும் தனியே வெறும் கழுத்தோடு போகும் போதும் அது இவளது மனத்தை உறுத்தத்ததான் செய்தது. எத்தனை முறை உள்ளுக்குள் அழுதிருப்பாள். உள்ளுக்குள் அழுது வெளியில் சிரித்து இரட்டை வேடம் அணிந்த நேரங்களை நினைத்து பெருமூச்செறிந்தாள்.

கடிகாரம் நான்கு தடவைகள் அடித்து கடமையைச் செய்து முடித்தேன் என்ற திருப்தியோடு ஓய்ந்தது. அவளது மனம் துணுக்குற்றது. இன்னும் சில மணித்தியாலங்களில் அவளது கணவன் வருவான். அவனை ஏற்றுக் கொள்வதா? ஓட விரட்டுவா? என்பதை நினைத்து அவள் மனம் போர்க்களமாயிற்று. விடிந்தது. அருளம்மாவிள் உள்ளத்திலோ இன்னும் விடியவில்லை. அருளம்மாவின் மனமோ விடிவை எதிர்பார்ப்பதா அல்லது மீண்டும் இருளோடு இருளாவதா என இரண்டு பட்டது. ஆம் இன்னும் சில நிமிடங்களில் அவளது கணவன் வரலாம் என்ன பதிலைச் சொல்வது? அவள் மனம் புயலாகியது. தெருவில் சென்று கொண்டிருந்த யாரோ ஒருவரின் "அதோ அருளம்மாவின் ஓடிப்போன புருசன் வாறான்" என்ற செய்தி வீட்டில் இருந்தோரின் செவிப்பறைகளைத் தாக்கியதுதான் தாமதம் மூத்தவன் ஏற்கனவே தயாராக வைத்திருந்த உலக்கையைத் தூக்கிக் கொண்டு "டேய் நீயெல்லாம் ஒரு அப்பனா? எந்த முகத்தோட இங்க வாறாய் நீ போய் உன்ர கனவுக் கன்னியோட காலந் தள்ளு" என்று தன் சொந்தத் தகப்பனை அடிப்பதற்காக ஓடினான். இதனைக் கண்ட அருளம்மா பாய்ந்து விழுந்து ஓடி இருவருக்குமிடையே வேலியாக நின்று கொண்டாள். அருளம்மாவைக் கண்ட அவள் கணவன் கரங்களைக் கூப்பினான். அவன் கண்களில் கண்ணீர். என்ன அதிசயம் அருளம்மாவின் கண்களிலும் கண்ணீர். ஆனால் மூத்தவன் கண்களில் ......?

*"தப்பான பிள்ளையல்ல எதுவும் சொல்லாதே*
*சந்தர்ப்பம் செய்த சதி வருவாய் இப்போதே" - இயேசுகாவியம்*

## கடி ஜோக்

வீபத்தில் சிக்கி ஆஸ்பத்திரியில் இருக்கும் மகனைப் பார்க்கவந்த தகப்பன்,, "என் மகன் எப்ப கண்ணைத் திறந்து பேசுவான் டாக்டர்?"
எல்லோரும் வாயைத் திறந்துதான் பேசுவாங்க கண்ணைத்திறந்து பேசமாட்டாங்க.

---

வாடிக்கையாளர் : "நீங்க இந்நேரம் கடையைப் பூட்டி விடுவீங்க எண்டு மூச்சு வாங்க ஓடி வந்தேன்"
கடைக்காரர் : "மன்னிக்கணும் நாங்க இங்க மூச்சு விற்பதில்லை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பியங்களின் யூபிலி சிறப்பிதழ்

## அன்பியமா? - அது என்ன?

1960 ஆம் ஆண்டுவரை திருச்சபை நிறுவனமயமான அதிகாரிகளைக் கொண்ட அமைப்பு முறையாக வளர்ந்து வந்தது. எனினும் இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் விடியலோடு திருச்சபையும் ஒரு புதிய மாற்றத்திற்குள் புகுந்து கொண்டது. இச்சங்கம் "மூவொரு கடவுள் சமூகமாக இருப்பதால் திருச்சபையும் ஒரு சமூகமே" என்னும் ஒரு எண்ணக்கருவை முன்வைத்தது. அதாவது திருச்சபை உறவோடும் பகிர்வோடும் உயிர்த்த கிறிஸ்துவுக்கு சாட்சியம் பகரும் ஒரு மக்கள் கூட்டம் என்பதை வலியுறுத்தியது. இச்சங்கத்தைத் தொடர்ந்து வந்த காலப்பகுதியிலே இந்த தரிசனப் பார்வை நிறைவேறுவதற்குரிய தளமாக சிறப்பான வழியாக அமைவது சிறிய கிறிஸ்தவக் குழுமங்கள் என்பது கண்டுணரப்பட்டது. இதுவே ஒரு சமூகங்களின் சமூகத்தை ஏற்படுத்தும் என்பது துல்லியமாக வெளிக் காட்டப்பட்டது.

இப்படியான சிறிய கிறிஸ்தவக் குழுமங்களைத்தான் நாம் "அன்பியம்" என்று அழைக்கின்றோம்.

- அன்பியம் ஏறத்தாழ 10 தொடக்கம் 15 குடும்பங்களை உள்ளடக்கியது.
- இது அயலில் உள்ள அயலவர்களைக் கொண்டுள்ளது (பிரதேச மொழி சாதி அந்தஸ்து இதற்கு அப்பாற் பட்டது)
- அன்பியங்கள் சிறிய சிறிய குழுவாக உருவாகி ஒரு சமூகங்களின் சமூகமாக உயிர்க்கின்றது.
- அன்பிய மக்கள் கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டு அவருக்கே தம்மை அர்ப்பணிக்கின்றனர். அத்தோடு வாழ்க்கை, விசுவாசம், அர்ப்பணம், வேலைத் திட்டங்கள், நட்புறவு, பொருள், நற்செய்திகள் ஆகிய அனைத்தோடும் ஆன்மீகம், அறிவு, உறவுகள் அனைத்தையும் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்கின்றனர்.
- அன்பியங்கள் திரித்துவத்தின் ஒருமைப்பாட்டையும் கிறிஸ்துவின் உடலின் மறை பொருளையும் ஆழமாக உணர்ந்துகொண்டு ஒருவரோடொருவர் ஆழமான உறவை ஏற்படுத்தி ஒருமைப்பாட்டின் சாட்சியாக வாழ்கின்றன.
- அன்பியங்கள் இறை வார்த்தையிலும், செபத்திலும், நற்கருணையிலும் உளமாற்றத்திலும், தியானத்திலும் நிலைபெற்றுள்ளன.
- அன்பியங்கள் தலைமைத்துவம், ஆற்றுப்படுத்தல், நெறிப்படுத்தல், கூட்டுப்பணி, இலகுப்படுத்தல் ஆகியவற்றில் தங்கியுள்ளன. முடிவுகள் உரையாடல் மூலமும் அர்ப்பணத்தின் மூலமும் எடுக்கப்படுகின்றன.
- மக்கள் மத்தியில் அன்பியங்கள் புளிக்காரமாக இருக்கின்றன.
- இவ்வுலகில் பணியாற்றுபவர்கள் வழியாக இறையரசிற்காகவும், நீதிக்காகவும் அன்பியங்கள் உழைகின்றன.
- அன்பியங்கள் இயேசுவின் மனநிலையோடு இவ்வுலகு நிலையற்றது என்ற உண்மையை உணர்ந்து ஏழைகளின் தோழமையை விரும்பித் தெரிவு செய்கின்றன.

## "இயேசுவின் புரட்சிகரமான வாழ்க்கைத் திட்டத்தை உங்கள் விருது வாக்காகக் கொள்ளுங்கள்"

### 600க்கும் அதிகமான அன்பியப் பணியாளர்கள் மத்தியில் ஆயர் அறை கூவல்



"இயேசுவினுடைய புரட்சிகரமான வாழ்க்கையிலிருந்து வெளிப்பட்ட வார்த்தைகளே லூக்காஸ் 6ம் அதிகாரம்20 ஆம் வசனத்திலிருந்து சொல்லப்படுகின்ற "சமவெளிப் பொழிவு" ஆகும். இயேசு பகைவரையும் மன்னித்து அன்பு செய்து வாழ வேண்டும் என புரட்சிகரமான பேதனையை முன் வைக்கின்றார். இந்த புரட்சிகரமான வாழ்க்கை நெறிக்கு எதிரான காரணிகள் ஊனியல் உலகம், சாத்தான் என்வையாகும். கலாத்தியர் 5ம் அதிகாரத்தில் புனித பவுல் ஊனியல்பின் செயல்களை நிரல்படுத்திக் கூறுகின்றார். இந்த இயல்புகள் கிறிஸ்துவோடு சேர்ந்து வாழ்கின்றவர்களை திசை திருப்புகின்றன என்றும் இந்த ஊனியல்புக்கு எதிராக நாம்போராட வேண்டும் என்றும் சுட்டிக் காட்டுகின்றார். அடுத்ததாக இந்தப் புரட்சிகரமான வாழ்வில் இருந்து நம்மை திசை திருப்புவது கவர்ச்சி மிகந்த இந்த உலகமாகும். புனித அருளப்பர் தன்னுடைய திருமுகத்தில் கூறுவார் "நீங்கள் உலகை வென்று விட்டீர்கள்" என்று. ஆகவே இந்த உலகத்தின் மதிப்பீடுகளுக்கு எதிராக வாழ இயேசுவின் புரட்சிகரப் போதனை நம்மைத் தூண்டி நிற்கின்றது. மூன்றாவதாக இயேசு எதிர்பார்க்கும் புரட்சிகரமான வாழ்வுக்கு எதிராக நிற்பது சாத்தான். 1 பேதுரு 5:8 இல் பேதுரு அறிவுறுத்துகின்றபடி கர்ச்சிக்கும் சிங்கம் போல இந்த சாத்தான் யாரை விழுங்கலாம் என்று வகை தேடி நிற்கின்றது. எனவே ஊனியல்பு உலகம் சாத்தான் ஆகிய இந்த மூன்று சக்திகளுக்கு எதிராகவும் நாம் போராட வேண்டும். இந்த வாழ்விலே அன்பு நமது அடிப்படை வாழ்க்கைத் தத்துவமாக அமைய வேண்டும். 1 கொரி 13 : 4- 7 இல் புனித சின்னப்பர் அன்பின் தன்மைகளைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றார்.
நெல் போன்ற வயலின் கனிகளையும் மீன் போன்ற கடற் கனிகளைம் நாளாந்த உணவாக உண்டு மகிழ்கின்ற நாங்கள் இறை வார்த்தையையும் நமது நாளாந்த உணவாகக் கொள்ள வேண்டும். இந்த வாழ்விலே நாம் மலர்ச்சி பெற வேண்டும். உலகக் கவலைகள் நிறைந்த சூழ்நிலையிலும் இறை அன்பையும் பிறர் அன்பையும் கொணடு மன்னித்து, ஏற்று புரிந்து பகிர்ந்து கிறிஸ்துவோடு சேர்ந்து நடப்பதே அன்பிய வாழ்வாகும். இயேசு நமக்குக் காட்டுகின்ற இந்தப் புரட்சிகரமான வாழ்க்கைத் திட்டத்தை விருது வாக்காகக் கொண்டு வாழும்படி அனைத்து அன்பியப் பணியாளர்களையும் அனைத்து இறை மக்களையும் இயேசுவின் பெயரால் கேட்டு நிற்கின்றேன்."

## "நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளைக் கழுவ கடமைப் பட்டிருக்கிறீர்கள்" (யோவா. 13:14)



நான் உங்களுக்கு மாதிரி காட்டினேன் (யோவா. 13:15)

## மன்னார் மண்ணில் அன்பியம் கருவாகி உருவாகியது பற்றி

### அன்பிய இயக்குநர் அந்தோனிதாஸ் டலிமா அடிகளார் விளக்குகின்றார்

அகில உலகத் திருச்சபையில்

**அன்பியம் வடிவமெடுக்க ஏதுவாய் அமைந்தவை**

- இறைவர்த்தைக்கான தாகம்
- குழும வாழ்விற்கான ஏக்கம்
- உறவுகளில் ஏற்பட்ட விரிசல்கள்
- ஆன்மீகத்தை உறுதிப் படுத்த வேண்டிய கட்டாயத் தேவை

**அன்பியம் ஆரம்பமாவதற்கான அத்திவாரம்**

**அன்று**

ஆதிக்கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறை

**இன்று**

- தென் அமெரிக்கா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் உருவான கலாச்சார, பொருளாதார சமய நிலைப்படுகள்.

**மன்னார் மண்ணில் அன்பியம் அரும்பியது**

**1994** - புதிய ஆயரின் பணியேற்போடு அருள் ஊற்று, அருள் மாரி போன்ற ஆன்மீகத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.
**1995** - ஆவணியில் அன்பியம் பற்றி குருக்களுக்கு அறிமுகக் கருத்தமர்வு, இடம்பெற்றது. ஐப்பசியில் மன்னார் மறைமாவட்டத்திலிருந்து ஐந்து பேர் அடங்கிய குழு ஒன்று கண்டியில் நடைபெற்ற அன்பிய சிறப்புப் பயிற்சியில் கலந்து கொண்டது.
**1996** - தை மறைமாவட்ட ரீதியில் மூன்று குழுக்கள் அமைக்கப்பட்டு பங்குகள் தோறும் அன்பிய விழிப்புக் கருத்தமர்வுகள் நடாத்தப்பட்டன.
**1997** - சித்திரை மாதம் அன்பியத்திற்கென முதன் முதலாக இணைப்பாளர் ஒருவரும் அன்பியத் தொடர்பகமும் உருவாக்கப்பட்டது.
இன்று சுமார் 2220 அன்பியங்கள் மறைமாவட்டம் முழுவதும் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

## மன்னார் மறைவட்ட அன்பிய மத்திய குழு

அன்பிய இயக்குனர்
*அருட்பணி அந்தோனிதாஸ் டலிமா*

அருட் சகோதரி ஸ்ரனி குளோறி
திரு. ஜே. பெஞ்சமின்
திரு. கை. டீ. பொன்கலன்
திரு. எவ். ஞானப்பிரகாசம்
திரு. எட்வேட்
திரு. மரியநாயகம் அல்மேடா
திரு. செபஸ்தியாம்பிள்ளை
திரு. சவிரி
திருமதி. ஜோதினி அன்ரன்
திருமதி. தவமணி பிரேமானந்தன்
செல்வன்.. டிலாசால் லெம்பேட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பியங்களின் யூபிலி சிறப்பிதழ்


### மீட்பரின் பணி என்னும் சுற்று நிருபத்தில்

## திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் அன்பியம் பற்றிப் பேசுகின்றார்

திருச்சபையில் இன்று மிக விரைந்து வளர்ந்து வரும் ஒரு சிறந்த அமைப்பு அடித்தள கிறிஸ்துவ அன்பியங்கள் ஆகும். ஆயர்களும், ஆயர்பேரவைகளும் மேய்ப்புப் பணியின் முதன்மை அம்சமாக இதனை வலியுறுத்தி ஆங்காங்கு ஊக்குவித்து வருகின்றனர். இவை கிறிஸ்துவ உருவாக்குதலுக்கும், மறைபரப்புச் செயற்பாடுகளுக்கும் சிறந்த தளங்களாக தங்களையே நிரூபித்து வருகின்றன.

இக்குழுக்கள் ஒரு பொதுவான அர்ப்பணத்தோடு செபம், நற்செய்தி வாசித்தல், மறைக்கல்வி நடத்துதல், மனித அல்லது திருச்சபை சார்ந்த பிரச்சினைகளைப்பற்றி கலந்தாய்வு செய்தல் போன்ற செயல்பாடுகளில் குடும்ப அடிப்படையிலே அல்லது வேறு ஏதாவது குறிப்பிட்ட வரையறைகளிலே ஒன்று சேர்ந்து ஈடுபடுகின்றனர். இவ்வன்பியங்கள் பரந்து விரிந்த திருச்சபையில் உயிர்துடிப்புக்கு அடையாளமாகவும், கிறிஸ்தவ உருவாக்கலுக்கு மற்றும் நற்செய்தி அறிவிப்புப் பணிக்கு ஒரு கருவியாகவும், அன்புக் கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய சமூதாயத்திற்குத் தொடக்கப்படியாகவும் அமைகின்றன.

இவ்வன்பியங்கள் பங்கோடு எப்பொழுதும் இணைந்திருந்து பங்குச் சமூகத்தின் பணிப்பொறுப்பை பன்முகப்படுத்தி ஒருங்கிணைக்கின்றன.



சமுதாயத்தில் ஏழைகள் வாழும் கிராமப் புறங்களில் இவை வேரூன்றி கிறிஸ்தவ வாழ்வில் புளிக்காரமாக மாறி ஏழைகள் சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டவர்கள் மேல் அக்கறை கொண்டு ஒரு புதிய சமுதாயத்தை கட்டி எழுப்பும் பணிக்கு தம்மை அர்ப்பணிக்கின்றன. இந்த அடித்தள சமூகங்களில் அதாவது அன்பியங்களில் ஒரு கிறிஸ்தவன் அன்பிய அனுபவம் பெறுகின்றான். தானும் பணியில் செயல் ரீதியாக ஈடுபட்டுள்ளதாக உணர்கின்றான். இணைந்து செயலாக்கத்திற்கு ஊக்குவிக்கப்படுகின்றான். ஆகவே இவ்வன்பியங்கள் நற்செய்தி பரப்பும் பணிக்கு கருவியாகவும் இறைவார்த்தை அறிவிக்கும் தொடக்கப் பணிக்கு உதவியாகவும் புதுப்புது அப்போஸ்தலப் பணிகளுக்கு ஊற்றாகவும் அமைகின்றன. கிறிஸ்தவ அன்பினால் ஊடுருவப்பட்டு பிளவுகளையும் இன குல வேறுபாடுகளையும் எப்படி மேற் கொள்ள முடியும் என்பதற்கு இவை சான்றாய் அமைகின்றன.

### அன்பியமே கிறஸ்தவம்

ஆதிக் கிறிஸ்தவர் அன்று
அவனியில் வாழ்ந்த வாழ்க்கை
நாதியற்ற நம்மவர்க்கு நல்லதொரு
எடுகோள் ஆகும்.

சாதித் தடிப்புடையோர்
சதிகாரர் சண்டாளர்
நீதி நெறியில் திருந்தி வாழ
அன்பியம் ஓர் அருமருந்து

அன்புதான் கிறிஸ்து
அன்பியம்தான் கிறிஸ்தவம்
என்பதையே உணர்ந்தோம்
இன்றுதானே எழுவோம்.

*அ. மன்னார்மணி*
*வஞ்சியன்குளம்*




### அன்பியமாய் ஆகிடுவோம்

அதிகார வெறியினை அகற்றிடுவோம்
அனைவரும் ஒன்று சேர்ந்திடுவோம்
உயர்வு,தாழ்வினில் இணைந்திடுவோம்
உடலிலே நலமாய் இருந்திடுவோம்

ஒருவருக்கு ஒருவராய் வாழ்ந்திடுவோம்.
ஒற்றுமை தன்னைப் பேணிடுவோம்
புத்துயிர் பெற்றிட விழித்தெழுவோம்
புண்ணியம் செய்து மகிழ்ந்திடுவோம்

நற்செயல் நாமும் செய்வதனால்
அன்பியமாய் நாம் ஆகிடுவோம்

*செ. மேரி ஜெனிற்றா*
*மாளிகைத்திடல*

## இதோ அன்பியங்கள் தங்களையே மதிப்பீடு செய்துகொள்ளட்டுமே!

அடிக்கடி அன்பியங்கள் தங்களுடைய பணியும் வாழ்வும் எவ்வாறு சென்று கொண்டிருக்கின்றன என்பதை சற்று சிந்தித்து பார்க்கவேண்டியுள்ளது. இப்படிச் செய்கின்றபோது அங்கே வளர்ச்சியும் முதிர்ச்சியும் ஏற்பட இடமுண்டு. சிறந்ததொரு அன்பியத்தில் முக்கியமான ஐந்து அம்சங்களால் நமது சுய மீளாய்வுத் திட்டம் (மதிப்பீட்டுத் திட்டம்) வழிநடத்தப் படுகின்றது.
01. கிறிஸ்து 02. சமூகம் 03. பணி
04. இணைப்பு 05. தலைமைத்துவம்

இத்திட்டத்திலே கொடுக்கப் பட்டிருக்கும் சில வினாக்களை வித்தியாசமான சந்தர்ப்பங்களிலே அன்பியம் ஒன்றின் உறுப்பினர் கலந்தாலோசனை செய்யலாம்.

**01. கிறிஸ்து எமது அன்பியத்தின் மையமா?**

- கிறிஸ்துவை எங்களுடைய அன்பியத்தின் மையமாக்க நாம் என்ன செய்யலாம்?
- நற்செய்திப் பகிர்வுக்கு நாங்கள் பிரமாணிக்கமுள்ளவர்களாக இருக்கின்றோமா?
- கிறிஸ்து நம்மிடம் இருந்து எதனை எதிர்பார்க்கின்றார் என்ற கேள்வியைக் கேட்கின்றோமா?
- அன்பிய உறுப்பினர் அனைவரும் ஒன்று கூடலுக்கு வரும் போது தமது வேதாகமத்தகைக் கொண்டு வருகின்றனரா?

**02. அன்பியத்தை நாங்கள் விரும்புகின்றோமா?**

- எமது அன்பியத்தில் எவ்வகையான மகிழ்வை நாம் அனுபவிக்கின்றோம்.?
- நமது தனிப்பட்ட வாழ்வில் அன்பியம் ஏற்படுத்தும் விளைவு என்ன?
- அன்பிய உணர்வைப் பாதிப்பது என்ன?
- எமது அன்பியத்தில் தாங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளோம் என்று அனைவரும் உணர்கின்றார்களா? அல்லது சிலர் தாம் ஒதுக்கப்பட்டுள்ளதாக உணர்கின்றார்களா?

**03. எமது சேவையை மற்றவர்களுக்கு வழங்குகின்றோமா?**

- எமது அன்பிய செயற்பாடுகள் என்னவாக இருந்தன?
- எந்த செயற்பாடுகள் தோல்வியில் முடிந்தன? ஏன்?
- எமது அன்பியத்திற்கு அப்பாலும் நாம் சேவை செய்யச் சென்றோமா?
- பிற மதத்தவர்களுக்கு நற்செய்தியை வழங்கினோமா?
- சமூக பொது விடயங்களில் எம்மை ஈடு படுத்தினோமா?

**04. முழுத் திருச்சபையோடு நாம் இணைக்கப்பட்டுள்ளோமா?**

- நமது அன்பியம் எவ்வாறு பங்கோடும் மறைவட்டத்தோடும் இணைக்கப்பட்டுள்ளது?
- நமது அன்பியம் பங்கில் ஒரு பகுதியென ஏற்றுக் கொள்ளப்படுவதாக நாம் உணர்கின்றோமா?
- எவ்வாறு குருக்களும் மேய்ப்புப்பணியாளரும் செயற்படுகின்றார்கள்?
- பயிற்சியைம் நெறிப்படுத்தலையும் எமக்கு அவர்கள் வழங்குகின்றார்களா?
- பங்கிலோ அல்லது மறைவட்டத்தினாலோ நாம் பயிற்றப்படுவதற்கு கொடுக்கப்பட்ட அழைப்பை ஏற்றுக் கொண்டோமா?

**05. எமது அன்பியத்தில் தலைமைத்துவம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப் படுகின்றது?**

- நமது அன்பியத்தில் "வழிகாட்டும்" "உயிரூட்டும்" தலைமைத்துவத்தை அனுபவித்தோமா?
- ஆதிக்கம் செலுத்தும் தலைமைத்துவத்தையோ அல்லது வற்புறுத்தும் தலைமைத்துவத்தையோ உணர்ந்தோமா? எப்போது?
- எவ்வளவு காலம் அன்பியத் தலைவர்கள் தமது பொறுப்பில் இருப்பார்? மற்றவரும் தங்களுடைய ஆற்றலை விருத்தி செய்யச் சந்தர்ப்பம் அளிக்கின்றனரா?
- நமது தலைவர்கள் முறையான நுட்பப் பயிற்சிகளையும் ஆன்மீக உருவாக்கத்தையும் பெற்றுக்கொள்கின்றனரா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் பொழிவு

## தொடர் 3

## உளி

இனியவனே! சென்ற உளி உன்னைக் காயப்படுத்தி இருக்கலாம். அதனால் உன் உள் மனசின் கரைகளில் ஆத்திர அலைகள் கூட அடித்திருக்கலாம். இளைஞனே, அதற்காக உன்னிடம் வருத்தம் தெரிவிக்கப் போனால் நான் பொய்யனாகிப் போய்விடுவேன். ஏனெனில், ஊசி போடுகின்றவன் மன்னிப்புக் கேட்க மாட்டான். சிநேகமானவனே(ளே) என் வார்த்தைகளில் இருக்கும் கோபத்தை விடுத்து அதில் இருக்கும் சோகத்தை நீ புரிந்து கொள்ள வேண்டும். பல கலைகளைக் கற்று பல தேர்வுகளை ஜெயித்து பட்டம் என்னும் பாரிய பொறுப்போடு இருக்கும் உன்னை ஒரு குறுகிய வட்டத்துக்குள் அடைத்து, உன் கிராமத்து மண்ணை மட்டும் மணம் வீசச் செய்ய வேண்டும் என்று நான் எண்ணவில்லை. உன்னை அவ்வாறாக நிர்ப்பந்திக்கவுமில்லை. கிராமத்து முலையிலே பால்குடித்து, கிராமத்து தெருக்களிலே தவழ்ந்து, கிராமத்து வாசத்திலே வளர்ந்து, கிராமத்துப் பள்ளியிலே பயின்று உன் மேற்படிப்புக்காக நகரத்து கைபிடித்து நீ நகர்ந்த வேளையிலே, என்றாவது ஒரு நாள் நீ திரும்பி வந்து தன்னையும் தன் பாமர மக்களையும் ஒரு அங்குலமாவது உயர்த்தி விடுவாய் என்ற நம்பிக்கையில்தான் உன் கிராமம் உன்னை கையசைத்து வழியனுப்பி விடுகின்றது. நகரத்து நாகரீகத்துக்குள் நுளைந்த நீ நாகரீக போதையிலே நன்றிமறந்து விடக்கூடாதே என்ற ஆதங்கமே தவிர என் வார்த்தைகளில் ஆத்திரமில்லை. பட்டம் பெற்று பதக்கத்தோடு வந்த நீ வேலைக்காக் காத்திருக்கும் வீணான பொழுதுகளில் பாமரஜாதிக்கு பகுத்தறிவோடு சேர்த்து படிப்பறிவையும் ஊட்டிவிடு என்று சொன்னேன். உன் நிரந்தர வேலையை விட்டுவிட்டோ, அன்றேல் நீ விரும்பாததை கட்டாயப்படுத்தி கற்பித்தாக வேண்டும் என்றோ நான் உன்னை நிர்ப்பந்திக்கவில்லை. பல தேர்வுகளில் தோற்றுப்போன என்னால் முடியாத காரியத்தை தேர்வுகளில் வெற்றி கொண்ட உன்னால் முடித்துவைக்க முயற்சிக்கின்றேன்.

தோழனே நான் உளியோடு வருவதால் நீ என்னை சிற்பியென்று தவறாக நினைத்துவிட்டாய். வில்லெடுத்தவன் எல்லாம் வேடனாகத்தான் இருக்க வேண்டுமா? அவன் போர்க்களம் செல்லும் வீரனாகவும் இருக்கலாமல்லவா? அது போலத்தான் நான் உளியோடு வருகின்றேன் என்றால் அது சிலை வடிக்கும் சிற்பியாக அல்ல. உன் நண்பனாக. உன் வாழ்க்கைப் பாதையில் நீ சந்திக்கும் சில மூர்க்கத்தனமான முடிவுகளை முற்றுக்கு கொண்டு வரவும், தகர்க்க வேண்டிய தடைகளை தகர்த்து விடுவதற்காகவும் சில அறிஞர்களின் கருத்துக்களோடும் பெரியோர்களின் பேருரையோடும் உன்னோடு கூடவே ஒரு நண்பனாக வருகின்றேன். நீ சோர்ந்து வருகையில் தாயாகவும், நோயில் படுக்கையில் தாதியாகவும், பாதைகள் தெரிகையில் தந்தையாகவும், அறிவோடு அழைக்கையில் ஆசானாகவும் உன்னோடு இருக்கின்றேன். "என் சமாகால இளைஞர்கள் என்ற பதத்திற்குள் நானும் அடக்கப்படுகின்றேன்" என்று உளி ஒன்றில் கூறியதும், "உன் நன்மை கருதும் நண்பனாய் உன்னைத் தொட்டுப் பழக உரிமை கொண்ட தோழனாய்" என்று உளி இரண்டில் கூறியதும் என்னை சிற்பியாக அறிமுகப்படுத்த அல்ல. நண்பனாக உன்னோடு இணைத்துக் கொள்ளவே. எனவேதான் ஆரம்பத்திலேயே என்னை உனது நண்பன் என்று சொல்லி வைத்தேன. இளைஞனே, உன்னிடம் இருந்து வரும் கடிதங்கள் என் பேனாவை முனைவரை சென்று முறுக்கேற்றி விடுகின்றன. என் உளியினை சாணை பிடிக்கும் சாணைக் கல்லாக பெரிதும் உதவுகின்றன. இருப்பினும் சிலரது தீர்மானமற்ற வரிகள் ஊமை கண்ட கனவைப் போல் பரிதாபமாக முடிகின்றது. திருப்தியற்ற வார்த்தைகளினால் அவர்களின் வாழ்க்கையும் தீர்மானமாகாமலேயே போய் விட்டது என்பது எனக்குப் புரிகின்றது.

இன்றைய இளைஞனே! உனது இலக்கு என்ன? உனது பயணம் எதை நோக்கி? உனது எல்லை எங்கே? என்று உன்னையோ அல்லது உனது பிம்பத்தையோ நீ என்றாவது கேட்டதுண்டா? பிறப்பதும் நம் கையில் இல்லை. இறப்பதும் நம் கையில் இல்லை. இடையில் வாழ்வதற்கு மட்டும் நாம் யார்? என்று வறட்டு வேதாந்தம் பேசாதீர்கள். தன்னம்பிக்கையை சுட்டெரிக்கும் எந்தவொரு வாசகமும் நமக்குத் தேவையில்லை. மரணம் மெய் என்பது எவ்வளவு பெரிய உண்மையோ வாழ்வு பொய் என்பதும் அவ்வளவு பெரிய பொய்யே! ஏனெனில் வாழ்க்கை உண்மையானது. வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிசமும் உண்மையானது. அந்த நிமிசங்கள் இலட்சியங்களால் மட்டுமே கௌரவிக்கப்படுகின்றது. காலச் சக்கரம் சுழன்று கொண்டிருக்கின்றது. அதனால் காலம் இறந்து விடுகின்றது. ஆனால், அது மனிதனின் செயல்களினால் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. இறந்தகாலத்தில் கட்டப்பட்டதுதான் தாஜ்மஹால். ஆனால், அந்த இறந்த காலம் தாஜ்மஹாலின் மேல் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. திருவள்ளுவன் இறந்த காலத்தில் இருந்தவன்தான் ஆனால் அவன் குறள்களினால் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். நிகழ்கால பூமியைச் செதுக்கிக் கொடுத்ததே இறந்த காலத்தின் இலட்சியமும் உழைப்பும் தான். இலட்சியமில்லாத வாழ்க்கை ஆணியில் தொங்குகின்ற சட்டையைப் போன்று உள்ளீடற்றுத் தள்ளாடுகின்றது.

இன்றைய இளைஞனே! இன்று உனது இலட்சியமென்ன? காற்றின் போக்கில் பறக்கும் காகிதமாய் நம்மில் பலருக்கு இலக்கு என்பது தீர்மானமாகாமலேயே இருக்கின்றது. பல நேரங்களில் அதை நாம் தீர்மானிப்பதே சாத்தியமில்லாமல் இருக்கின்றது. எனவே நம் இளைஞர்கள் பலருக்கு இருக்கும் வரைக்கும் சுவாசிப்பதே இலட்சியமாயிருக்கின்றது. அல்லது சுவாசிக்க முடிந்த வரைக்கும் இருப்பதே இலட்சியமாயிருக்கின்றது. இளைஞனே! உனது இலக்கும் இலட்சியமும் உனக்கு மிக அண்மையில் இருக்கலாம். அல்லது சூரிய மண்டலத்தைப் போல் தொட முடியாத தூரத்தில் இருக்கலாம். ஆனால், ஏதாவது ஒன்று இருக்கட்டும். உனது நெடிய பாதையில் உனது இலட்சியத்தைக் காட்டிக் கொண்டே உன்னை நீ வழிநடத்த வேண்டும். உனது பதினைந்தாவது வயதில் இருந்து இருபத்தைந்தாவது வயதிற்குள் உனது திசை எது என்பதை நீ தீர்மானிக்கத் தெரிந்து கொள்ளாவிட்டால் உனது பயணத்தில் நீ பாறையில் மோதிய பந்தாய் திரும்பி வரவேண்டியிருக்கும். அப்படிப் படும் அடியினால், முப்பது வயதிலேயே உனக்கு முதுமை வந்துவிடும். ஏனென்றால் நமது கல்வி விரல்களைத்தான் வேலை வாங்குகின்றதே தவிர மூளையையும் மனசையும் அது முழுமையாக்கவில்லை. எனவேதான், நம்மில் பலர் ஒரு சிறு தோல்வியிலும் காழானில் இடி விழுந்தது மாதிரிக் கருகிப் போய் விடுகின்றோம். உனது இலட்சியம் என்று நீ கோடு கிழித்துக் கூறுவது எதை? மருத்துவனாவது, பொறியியல் வல்லுனராவது, எழுத்தாளராவது, ஆசிரியராவது, ஓவியராவது, அரச தொழில் புரிவது இவை போன்ற ஆசைகளுக்கொல்லாம் நீ இலட்சியம் என்று நாமம் சூட்டக் கூடாது.

**பி. நெல்சன்**
**எழுத்தூர்**

இவைகளெல்லாம் இலட்சியங்களல்ல. நீ தேர்ந்தெடுக்கும் துறைகள் - அவ்வளவுதான். இந்தத் துறையில் வாழ நினைப்பது உன் விருப்பம். ஆனால் இந்தத் துறையை வாழ வைப்பது உன் இலட்சியம். நீ ஈடுபடும் துறையில் உன் பெயர் செல்லும் முத்திரை என்ன? குறைந்த பட்சம் உன் இலட்சியம் என்பது அதுதான். நம்மில் பலருக்கு உத்தியோகம்தான் இலட்சியம் என்பதனால் நாம் மரணத்தறுவாயில் கூட ஓய்வின்றி அலுவலகம் செல்கின்றோம். இளைஞனே, உனது இலட்சியம் என்பது வெறும் பதவி உயர்வு மட்டுமல்ல. அதற்கு மேலே. நீ ஈடுபடும் துறையில் உனது இலட்சியம் என்ன என்பதை நீ தீர்மானித்துக் கொள்ள வேண்டும். உனக்கென்று ஒரு பாதை வகுத்துக் கொள்ள வேண்டும். அந்தப் பாதையிலேயே நீ பயணப்பட வேண்டும். உனது இலக்கினை எய்தும்வரை நம்பிக்கையோடு நடக்க வேண்டும். எதிரி என்று ஒருவன் இல்லையென்றாலும் எதிரியை ஏற்படுத்திக் கொள் என்றார் "மாசே துங்" என்ற அறிஞர். அதுபோல இதுவரைக்கும் இலட்சியம் என்று ஒன்று இல்லாவிட்டாலும் இனிமேலாவது இலட்சியத்தை ஏற்படுத்திக் கொள். வாழ்க்கை உனக்கு வசப்படும். வாழ்வு உனக்கு சுகப்படும். உனது இலட்சியம் வெல்ல வாழ்த்துக்கள். (உனது தேவைகளை மடலில் எழுதிவிடு அடுத்த இதழிலும் உளியோடு வருவேன்)

# வாசகர் எண்ணங்கள்

### மாற்றமுடன் மன்னா

மன்னாவே மன்னாவே இது என்ன மாற்றம்?
கண் குளிர உன்னை கண்டு நாம் வியக்கின்றோம்.
திறமையான உன்னாக்கம் மறையை அறிவிக்குதே.
விடியலுக்காய் விரையும் திருச்சபையின் துன்பத்தில்
துணையிருக்கும் தோழனாய் தொடர்ந்து வருகின்றாய்
சுடர் வீசும் உன்மறைப் பணி தொடர, வளர
மன்னாவே மன்னாவே உனை நான் வாழ்த்துகிறேன்.

*எஸ். றெஜினோல்ட், அ.ம.தி. குருமடம்*
*யாழ்ப்பாணம்*

### சரியான வளர்ச்சிப் பாதை

எனது தாமதமான வாழ்த்துக்கு மன்னிக்கவும். உண்மையிலேயே மன்னா இப்பொழுது நிறைந்த கருத்துக்களோடு சரியான வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. வாழ்த்துக்கள்.

*அருட் சகோதரன் நிமல்ராஜ்*
*மதகுவைச்ச குளம், வவுனியா.*

### மன்னாவைத் தேடுகின்றேன்.

என் இதயம் கவர்ந்த இனிய மன்னாவே, மாதம் ஒரு முறை உன்னைப் பார்ப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். நீ சுமந்து வரும் இறை வார்த்தைகள், கதைகள், சிந்தனைகள் அனைத்தும் என் இதயத்துக்கு அமைதியையும் ஆறுதலையும் தந்து ஆன்மப் பசியைப் போக்குகின்றது. நன்றிகளும் வாழ்த்துக்களும்..

*செல்வி ஏ. யசிந்தா, சின்னக்கரிசல்*

### உன் சேவை எங்களின் தேவை

அன்று பாலை வனத்தில் மன்னா, இன்று மன்னாரில் மன்னா. அன்று வயிற்றுப் பசியைப போக்கிய மன்னா இன்று எங்கள் ஆன்மப் பசிக்கு விருந்தளிக்கின்றது. மன்னாரின் மன்னாவே உன் சேவை எங்களின் தேவை. உன் பணி என்றும் எங்களின் ஆன்மப் பசியை நிறைவு செய்ய வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

*செல்வி. டாலி சந்தாம்பிள்ளை*
*எழுத்தூர், மன்னார்*

### உளி தொடருக்கு மிகுந்த வரவேற்பு

மன்னாவின் தரமும் விடயங்களும் என்னை மென்மேலும் குதூகலிக்க வைக்கின்றது. நாளுக்கு நாள் மன்னா வளர்ந்து வருகின்றன. மன்னாவில் வெளியாகும் அனைத்து அம்சங்களும் மிகவும் தரமாக இருக்கின்றன. இனிமேலும் இருக்கும் என நம்புகின்றேன். மன்னா ஆசிரியர் ஒவ்வொரு விடயத்தையும் கருத்தாகவும் அவதானமாகவும் செய்யக்கூடியவர் என்பது புலனாகின்றது. ஆசிரியர் ஆக்கங்களை மிகவும் நுணுக்கத்தோடும் கருத்தோடும் தேர்ந்தெடுத்து வெளியிடுகின்றார். கட்டுரைகள் தொடர் அம்சங்கள் இன்னும் சிறப்பாக உள்ளன. குறிபாக இளைஞர் பொழிவில் இடம்பெறும் **"உளி"** என்ற தொடர் என் போன்ற இளைஞர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. சிறந்த ஆக்கங்களை எமக்குத்தரும் ஆசிரியருக்கும் உளி தொடரை வழங்கும் எழுத்தாளர் நெல்சனுக்கும் எனது நன்றிகளும் பாராட்டுக்களும். *சுமன், முருங்கன்*

### தற்கால வெளியீடுகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் மன்னா

மன்னார் மறைமாவட்டத்தின் துரித ஆன்மீக வளர்ச்சிகளுக்கும் முயற்சிகளுக்கும் ஏற்ப மன்னா சிறந்த ஓர் நிலையில் வெளிவருகின்றது. மறை மாவட்டச் செய்திகளையும், அனைத்துலக திருமறைச் செய்திகளையும் தற்கால வெளியீடுகளுக்கு ஈடு கொடுக்கும் வகையில் மன்னா வெளியிட்டு வருகின்றது. வாழ்த்துக்கள்.

*அருட்திரு. அ. ம. ஸ்ரீபன்*
*இலங்கை மாகாண முதல்வர், செபமாலை தாசர் சபை*
*வுனியா*

### ஆன்மீகத் தண்ணீர் ஆறாய் ஓடுகிறது

மன்னா உன் வரவு கண்டு உற்சாகம் பிறக்கிறது. ஆன்மீகத் தண்ணீர் ஆறாய் ஓடுகிறது. உன்னுள் அடங்கியிருக்கும் அத்தனை அம்சங்களும் என் வாழ்வை வளப்படுத்துகின்றது. வாழ்த்துக்கள்

*சி. தேவசீலன். கிளரீசியன் குருமடம்*
*குருதெனிய, கண்டி*

## இதயத்தால் இணைந்திடுவோம்

### இயேசுவின் இல்லம்

பரலோகத்தைப் படைத்தவர்
பூமியை ஆழ்பவர்
புவியில் அவதரிக்க
புல்லணையில் பிறந்ததேன்!
புவியில் வேறு இடமில்லையோ
பூவுலகோர் ஏற்கவில்லையோ?
எளிமைதான் அவர் இல்லமோ?
ஏழ்மைதான் அவர் கோலமோ?
தாழ்ச்சியின் உறைவிடமோ?
தம்மையே தாழ்த்தினாரோ?
பாவிகள் எங்களுக்காய்
பரலோகம் நின்றிறங்கி
பலியாடாய் மரித்ததேனோ?

*ஆ. டக்ளஸ், சிறிய குருமடம்*

### சமாதானம்

யுத்தம் நாட்டில் குடி கொண்டது
ஒற்றுமையே நாட்டில் மறைந்தது.
கவி பாட வேண்டிய புறாக்கள் கூட
சமாதானம் இன்றி அலையுது
இது ஏன் இறைவா?
யுத்த நாட்டிற்கு எம் மக்கள்
அடிமையாகின்றனர் இது
நிறைவேறுமா?
பதில் சொல் இறைவா?
சமாதானம் என்ற சொல் மலர
வேண்டும்
அது என்றும் புனித மண்ணிலே
நிலைக்க வேண்டும

ஏ. யுப்பிறஸ், மன்னார்

### மற்றவர்கள் மட்டில்

நாம் மற்றவர்களைப் புரிவது
எம் அறிவின் இரகசியம்
நாம் மற்றவர்களைத் தூற்றுவது
எம் கோபத்தின் பலவீனம்
நாம் மற்றவர்களை உதறுவது
எம் மனத்தின் சுகவீனம்
நாம் மற்றவர்களைப் பழிப்பது
எம் மடமையின் அவலட்சணம்
நாம் மற்றவர்களைத் தேற்றுவது
எம் அன்பின் ஞான உபதேசம்
நாம் மற்றவர்களை அரவணைப்பது
எம் பாசத்தின் கருணோதயம்

*ஏ. யேசுராஜ் குரூஸ், அமத,குருமடம்*
*யாழ்ப்பாணம*

### யுத்தக் கொடுமை

கொடுமை கொடுமை கொடுமையிது
பாரினில் யுத்தக் கொடுமையிதே
மானிடர் செய்த தவறென்னவோ?

மண்ணிலே மடிந்து வீழ்கின்றோமே
போர் என்னும் அரக்கன் புகுந்ததனால்
புவியினில் யுத்தக் கொடுமையிதே

பஞ்சமும் பசியும் சூழ்ந்திடவே
பட்டினிச் சாவு மலிகிறதே
யுத்தம் தந்த பரிசிதுவே

*ய. டொறினி பெரேரா, வட்.8,*
*போசாலை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் அரங்கம்

## உரத்த சிந்தனை -உரைப்பது "ஸ்நாபகன்"

# தேர்தலும் நாமும்



### தேசம் தழுவிய தேர்தல் களம

இன்று எல்லோருடைய வாயிலும் அடிக்கடி உச்சரிக்கப்டும் சொற்பதம் தேர்தல். இந்த நாட்டின் பதினோராவது பாராளுமன்றத்தைத் தெரிவு செய்வதற்காகப் பொதுத் தேர்தல் எதிர்வரும் ஒக்டோபர் பத்தாம் திகதி நடைபெறவுள்ளது. 196 பாராளுமன்றப் பிரதிநிதித்துவங்களுக்காக 22 தேர்தல் மாவட்டங்களில் இருந்து அரசியற் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களைச் சேர்ந்த 5015 வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் குதித்துள்ளனர்.

### வன்னிமாவட்டத் தேர்தல் களம்

இதே நேரம் குறைந்த வாக்காளர்களைக் கொண்ட வன்னித் தேர்தல் தொகுதியில் 6 பாரளுமன்றப் பிரதிநிகளைத் தெரிவு செய்வதற்க 17 அரசியற் கட்சிகளும் 7 சயேற்சைக் குழுக்கழுமென மொத்தமாக 216 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இதுவே 22 தேர்தல் மாவட்டங்களிலும் குறைந்த பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய கூடுதல் வேட்பாளர்களை நிறுத்தியுள்ள தேர்தல் மாவட்டமாகும்.

### வாக்காளர்களும் வாக்களிப்பு நிலையங்களும

இந்தப் பொதுத் தேர்தலில் ஒரு கோடியே 2 லட்சத்து 71 ஆயிரத்து 101 வாக்காளர்கள் 160 தேர்தல் தொகுதிகளிலும் உள்ள 9 ஆயிரத்தி 945 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்கவுள்ளனர்.

### திடீர் ஞானோதயம்

தேர்தல் பிரச்சாரம் சூடு பிடித்துள்ள இவ்வேளையில் பணம் தண்ணீராக அள்ளி வீசப்பட்டு ஆதரவாளர்கள் விலை கொடுத்து வாங்கப்படுகின்றனர். அரசியல்வாதிகளுக்கு இப்போதுதான் திடீர் ஞானோதயம் பிறந்துள்ளது. எப்போதுமில்லாத கரிசனையும் அன்பும் மக்களின் தேவைகள் மட்டில் அதீத அக்கறையும் அரசியல்வாதிகளுக்கு திடீரென ஏற்பட்டு விட்டது கண்டு மக்கள் திகைக்கின்றனர். தம்மட்டில் இவர்களுக்கு இவ்வளவு அக்கறையா என அதிசயித்து ஆச்சரியத்தில் மூச்சடைத்து செய்வதறியாது நிற்கின்றனர்.

### மக்கள் மௌனமாக சிரிக்கின்றனர்

மரணிக்கும் உயிர்களைப் பற்றியும் கவனிக்காது பிணம் தின்னிக் கழுகுகள் போட்டி போடுவது போன்று இத் தேர்தல் அமைந்துள்ளது. மக்களைப் பற்றி எள்ளவும் கருத்திற் கொள்ளமல் இருந்த தமிழ்க் கட்சிகளின் அரசியல்வாதிகள் இன்று மக்களுக்காக அவர்களது உரிமைகளுக்காக நாங்கள் குரல் கொடுப்போம் என மார்பைத் தட்டிக் கதைக்கின்றனர். இவர்கள் செய்த அட்டூழியங்களுக்காக மார்பைத் தட்டி அபயக்குரல் எழுப்பிய மக்கள் இன்று மௌனமாகச் சிரிக்கின்றனர்.

### தெரிவு நம் கையில்

எது எப்படி இருந்தாலும் தேர்தல் தேர்தல் என ஓயாது ஒலிக்கும் செய்திகள் மத்தியிலும் அரசியல்வாதிகளின் பிரச்சாரங்கள் மத்தியிலும் என்ன செய்வது என்று தெரியாது குழம்பிப் போயுள்ள மக்கள் ஒன்றை மட்டும் மனதில் இருத்திக் கொள்வது நல்லது. அதாவது இத்தோர்தலால் அல்லது இத் தேர்தல் முடிவுகளால் யுத்த முழக்கங்களோ அல்லது யுத்த அவலங்களோ தீரப்போவதில்லை. ஆயினும் சரியான ஆளுமையுள்ள பாராளுமன்றப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுமிடத்து நமது அன்றாட பிரச்சினைகளை நாம் படும் அவஸ்தைகளை குறைப்பதற்கு தெரிவு செய்யப்டும் இப்பிரதிநிதி முயற்சி செய்யலாம். எனவே இத் தேர்தலின் போது மக்கள் தமக்குள்ள வாக்குரிமையைப் பயன்படுத்த வேண்டும். யாருடைய வற்புறுத்தலுக்காகவும் அல்லது அற்ப சொற்ப சலுகைகளுக்காகவும் அடிபணிந்து போகாமல் ஆற அமர சிந்தித்து தமது வாக்குரிமையை பயன்படுத்துவது புத்திசாலித்தனமாகும்

### நீதியான தேர்ல் நடைபெறுமா?

நடை பெறப்போகும் பொதுத தேர்தல் நீதியாகவும் நேர்மையாகவும் ஜனனாயக ரீதியாகவும் நடை பெறுமா? என்னும் கேள்வி பொது மக்களின் உள்ளங்களில் எழுகின்றது. இந்நேரத்தில் மக்கள் விழிப்புடன் இருந்து அநீதிகளைச் சுட்டிக் காட்ட வேண்டும். அனைத்துக் கட்சிகளும் நீதியான நேர்மையான தேர்தல் நடைபெற ஒத்துழைக்க வேண்டும்.

## யார்?



"அம்மா தாயே"
குரல் கேட்டால் பிச்சை
எனக் கருதி விட வேண்டாம்.
வாக்குக் கேட்க வந்த
வேட்பாளராகவும் இருக்கலாம்!

(தீலீபா) - நன்றி தமிழ்த் தேசம்

## கேள்வி பதில் பகுதி

வருகிற இதழ் தொடக்கம் "கேள்வி-பதில் பகுதி" ஒன்றை ஆரம்பிக்கவுள்ளோம். வாசகர்கள் தாங்கள் விரும்பிய கேள்விகளை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

கேள்வி பதில் பகுதி
மன்னா
திருமறைப் பணி நிலைம்
மன்னார்

## பயோ டேற்றா




| | |
|---|---|
| கௌரவப் பெயர் | - பென்சனியர் பொன்னையா |
| பிறந்தது | - சுதந்திரத்திற்கு முன்பு |
| உடலில் ஒட்டியிருப்பது | - பிரிய மறுக்கும் உயிர் |
| இரத்த உறவுகள் | - அயல் நாடுகளில் அகதிகளாக |
| இன்று அனுபவிப்பது | - தனிமையின் கொடுமையை |
| எதிரில் கிடப்பது | - பச்சையை மறந்த விளை நிலங்கள் |
| சமீபத்தில் கேட்பது | - வேட்பாளரின் அலறும் ஒலிபெருக்கிகள் |
| தூரத்தில் அதிர்வது | - போர்த் தளபாடங்களின் அசைவுகள் |
| அமைதியைக் கலைப்பது | - போர் விமானங்கள் |
| வயிற்றைக் குமட்டுவது | - புளுத்த வாடையடிக்கும் ரேசன் பொருட்கள் |
| இதயத்தைத் தொடுவது | - சோற்றுப் பருக்கைக்காக கையேந்தி நிற்கும் இளசுகள் |
| எரிசல் படுவது | - ஓட்டுக் கேட்க வரும் வேட்பாளர்களை நினைத்து |
| சொல்ல நினைப்பது | - நாங்கள் பலிக்கடா அல்ல என்று |

(கௌதமன்) - நன்றி ஆதவன்

# மக்கள் களம்

வாசகர்களே!
மக்கள் களம் என்ற இப் புதிய பகுதி உங்களுக்காகவே. உங்கள் கிராமத்தின் - சமூகத்தின் தேவைகள் அல்லது குறைபாடுகள் மற்றும் உங்கள் மன உழைச்சல்கள், ஆதங்கங்கள் என்பவற்றிற்கு களம் அமைத்துத் தரும் பகுதி இது. உங்கள் கருத்துக்கள், தேவைகளை சுருக்கமாக, சுவாரசியமாக களத்திற்கு எழுதி அனுப்புங்கள் பயனுள்ளவற்றை பிரசுரிப்போம் - (ஆ-ர்)



**"ஆண்டவருடைய ஆவி என் மேல் உளது
ஏனெனில் அவர் எனக்கு அருட் பொழிவு செய்துள்ளார்
ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கவும்
சிறைப்பட்டோர் விடுதலை அடைவர்
பார்வை அற்றோர் பார்வை பெறுவர் என முழக்கம் இடவும்
ஒருக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும்
ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை அறிவிக்கவும் அவர் என்னை
அனுப்பியுள்ளார்" - (லூக்காஸ் 4:18-19)**

## மன்னார் மக்களின் கடல் வளங்கள்

# இந்திய மீனவர்களால் கொள்ளையிடப்படுகின்றன

### கேட்க யாருமே இல்லையா?

கடலும் கடல் சார்ந்த இடமுமாகிய நெய்தல் நிலத்தைச் சார்ந்த மன்னார் மாவட்ட மக்கள் இன்று தொழில் வாய்ப்பிழந்து பசியோடும் பட்டினியோடும் வாடுகின்றனர். கடலோரப் பிரதேசங்களை நோக்கினால் வட கடல் பக்கமாக தலைமன்னார்பியர், பேசாலை, வங்காலைப்பாடு, எருக்கலம்பிட்டி, பள்ளிமுனை, விடத்தல் தீவு, கள்ளியடி, இலுப்பக்கடவை, தேவன்பிட்டி வரையும் தென் கடலோரமாக தலைமன்னார் கிராமம், ஸ்ரேசன், குடியிருப்பு, தாழ்வுபாடு, சவுத்பார், பனங்கட்டுக் கொட்டு, பெரியகடை, உப்புக்களம், வங்காலை, நறுவிலிக் குளம், அச்சங்குளம், அரிப்பு, சிலாவத்துறை, கொக்குப்புடையான் வரையுமான மீனவக் கிராமங்களாகும். யுத்தாகால பாதுக்கப்புக் காரணங்களை முன்வைத்து அரசு மீனவர்களின் தொழில் முயற்சிகளை பல வகையாலும் மட்டுப் படுத்திக் கட்டி வைத்திருக்கின்றது. இரவு நேர தொழிலுக்கு செல்ல முடியாத நிலைமையும் குறிப்பிட்ட கடல் எல்லைக்கு அப்பால் மீன் பிடிக்க முடியாத நிலைமையும் குறிப்பிட்ட அளவு எரிபொருட்களை மட்டுமே பயன் படுத்த வேண்டிய நிலைமையும் இயந்திரங்களை பாதுகாப்புப் படையினர் முகாமில் வைத்து எடுக்க வேண்டிய நிலையும் மன்னார் மாவட்ட மீனவர்களின் தொழிலைப் பெருமளவில் பாதித்துள்ளன. இதைவிட நெஞ்சை நெகிழ்த்தும் நிலை மன்னார்க் கடற்பரப்பில் அத்துமீறி வரும் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளாகும். பேசாலை தலைமன்னார், கடற்கரைக்கு சமீபமாக நினறு பார்க்கும் பொழுது இரவு நேரங்யளில் பாக்கு நீரிணை கடற் பரப்பு இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளினாலும் அவற்றின் சுடர் மிகு மின் விளக்ககளின் ஒளிகளினாலும் நிறைந்திருக்கும். கடலில் பெரியதோர் நாகரீக நகரம் அமைந்திரக்கின்றதோ என்ற பிரம்மையை பார்ப்பவர்களுக்கு இந்தக் காட்சி ஏற்படுத்தும்.

ஒரு தடவை இப்படியாக இந்தியப் படகுகள் வந்து மன்னார் மாவட்க் கடற்பரப்பில் நின்று மீன்பிடித்துவிட்டுச் சென்றால் கடல் வளங்கள் அனைத்தயுமே அவை வாரி அரித்து சென்று விடுகின்றன. இதன் பிற்பாடு மன்னார் மீனவர்கள் கடலுக்கு தொழிலுக்காகச் செல்லும் பொழுது வெறும் படகுகளோடும் வெறும் கையோடும் வாடிய முகத்துடனும் திரும்பி வருகின்றனர். இந்திய மீனவர்களின் இச் செயலைக் கட்டுப்படுத்தும் படி உரிய கடற்படை அதிகாரிகளிடம் முறையிட்டும். அரசியற் காரணங்களைக் காட்டி தம்மால் எதுவும் செய்ய முடியாது என கையை விரித்து விட்டனர்.
மீனவர்களின் இவ் வாழ்க்கைப் பிரச்சினையைக் கேட்க யாருமே இல்லையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குச் செய்திகள்

இளையவர்களின் கலையாற்றலை வளர்க்க

### பண்டிவரிச்சான் பங்கில் மடுமாதா திருமறைக் கலையகம்

பண்டிவிரிச்சான் பங்கு கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் ஆதரவில் பங்குத் தந்தை மாக்கஸ் அடிகளாரின் அனுசரணையுடன் மேற்படி கலையகம் 16.09. 2000 அன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சங்கீதம் நடனம், ஆர்மோனியம், மிருதங்கம் ஆகிய பயிற்சி வகுப்புக்கள் இக்கலையகத்தால் நடாத்தப்படுகின்றன. ஏறக்குறைய 70 மாணவ மாணவியர் இதில் பங்கெடுத்து பயன்பெறுகின்றனர்.

கணனி யுகத்தில் இடம்பிடிக்க

### விரைவில் வங்காலைப் பங்கில் கணனிப் பயிற்சி நெறி

பஸ்ரியன் அடிகளாரின் நினைவாக அருட் சகோதரர் பப்ரிஸ்ற் குருஸ் அவர்களால் வங்காலைப் பங்குக்கு வழங்கப்பட்ட நிதியில் இருந்து ஆயருடைய அனுசரணையுடன் வங்காலைப்பங்கில் விரைவில் கணனிப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்குரிய பூர்வாங்க நடவடிக்கைகளை பங்குத் தந்தை யேசுராஜா அடிகளார் மேற்கொண்டுள்ளார்.

பங்குகளுக்கிடையே பகிர்வு

### இசைமாலைத்தாழ்வு ஆலய நிதிக்காக வங்காலையில் நாட்டுக்கூத்து

கற்கடந்தகுளம் பங்கைச்சோந்த இசைமாலைத்தாழ்வு ஆலய கட்டிட நிதிக்காக 02.09.2000, அன்று வங்காலையில் மறை காத்த மங்கை என்ற பெயரில் புனித பிலோமினம்மாவின் வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட நாட்டுக் கூத்து நாடகம் இடம்பெற்றது. இசைமாலைத்தாழ்வு ஆலயத்தைச் சார்ந்த மக்கள் மேற்படி நாடகத்தை மேடையேற்றினர். அன்றைய நிகழ்வின்போது வங்காலைப்பங்கு பீடப்பணியாளர்களினால் விசுவாசத்தின் தந்தை என்ற நாட்டுக் கூத்து நாடகமும் இடம்பெற்றது.

இறையாசி வேண்டி

### முருங்கன் பங்கு களிமோட்டையில் சந்தொம்மையார் வாசாப்பு

01.09.2000 அன்று களிமோட்டையில் சந்தொம்மையார் வாசாப்பு அரங்கேற்றப்பட்டு திருப்பலியோடு நிறைவு பெற்றது,

பங்குத் தந்தையும் பங்கேற்று நடித்த

### கற்கிடந்த குளப் பங்கின் சற்பிரசாத வாசாப்பு

கடந்த 29. 08. 2000அன்று மேற்படி வாசாப்பு இடம்பெற்றது. இதில் கற்கடந்த குளப் பங்குத் தந்தை ஸ்ரீபன் அடிகளார் 1வது மத்தியாஸ் பாத்திரமேற்று நடித்தது குறிப்பிடத்தக்கது.

அரிப்புப் பங்கில் உள்ள

புல்லச்சி பொற்கேணி கார்மேல் நகரில்

### மக்கள் மீண்டும் குடியமர்வு

கடந்த 10 வருடங்களாக இடம்பெயர்ந்த நிலையில் வாழ்ந்த மேற்படி கிராமத்தைச் சேர்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்த கிராமத்திற்கு குடியமர்ந்துள்ளனர். தமது பாதுகாவலியாகிய கார்மேல் அன்னையின் திருச்சுருபத்தை தமது ஆலயத்திலேயே வைத்துக்கொண்டு அந்த அன்னையின் பாதுகாவலிலில் ஏறக்குறைய 15 குடும்பங்கள் இவ்வாறு இக்கிராமத்தில் மீளக் குடியமர்ந்து வாழ்கின்றன.

கீளியன் குடியிருப்புப் பங்கின் நடுக்குடா ஆலயம்

### புனரமைக்கப்பட்டு ஆயரினால் திறந்து வைக்கப்பட்டது

கடந்த 8.9.2000 அன்று அன்னை மரியாளின் பிறந்த நாள் வேளையில் நடுக்குடா புனித ஆரோக்கிய அன்னை ஆலயத் திருவிழா இடம்பெற்றது. புனரமைக்கப்பட்டு மெருகூட்டப்பட்ட இந்த ஆலயத்தை மன்னார் ஆயர் அவர்கள் ஆசீர் வதித்து திறந்து வைத்தார்.

முருங்கனில்

### பங்குத் திருவிழாவும் நற்கருணைப் பவனியும் முதல் நன்மைப் பெருவிழாவும்

முருங்கன் பங்கின் பெருவிழாவும் புது நன்மைத் திருவிழாவும் 30. 07. 2000 அன்று சிறப்பாக நடந்தேறின. 29.07.2000 அன்று நற்கருணை நாதர் வீதி வழியாக அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் எடுத்து வரப்பட்டு வீதியில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தல்களில் தரித்து வழிபாடுகள் செய்யப்பட்டன. திருவிழா அன்று இடம்பெற்ற புது நன்மை விழாவில் 80 க்கும் அதிகமான சிறார்கள் புது நன்னை பெற்றனர்.

## கிறிஸ்தவ மறையறிவுப் போட்டி முடிவுகள்

மறையறிவுப் போட்டி 1 இல் பங்கெடுத்து சரியான விடையை எழுதியவர்கள்

**1 ஆம் இடம்**

பி. தேனுஜா
புனித சவேரியார் பெண்கள் கல்லூரி
மன்னார்

**2 ஆம் இடம்**

திருமதி செ.திரேசம்மா பல்தானோ
6 ஆம் வட்டாரம்
பேசாலை

**3 ஆம் இடம்**

எ. நோயலின் செல்வமணி கூஞ்ஞ
2ம் வட்டாரம்
வங்காலை

**4 ஆம் இடம்**

பி ஆன்ஸ் சுசாந்தினிஸ
ஆண்டு 9
முருங்கன் மகா வித்தியாலம்
முருங்கன்

போட்டியில் பங்கெடுத்த அனைவருக்கும் எமது நன்றிகளும் பாராட்டுக்களும்.

## கிறிஸ்தவ மறை அறிவுப் போட்டி இல 2

1. தற்போதைய திருத்தந்தை திருச்சபையின் எத்தனையாவது திருத்தந்தை?
2. திருச்சபையில் முதன் முதலில் பிளவு ஏற்படக் காரணமாயிருந்தவர் யார்?
3. இலங்கையை தரிசித்த பாப்பரசர்கள் யாவர்?
4. வாமும் புனிதை என அழைக்கப்பட்டவர் யார்?
5. 33 நாட்கள் மட்டுமே திருத்தந்தையாகப் பதவி வகித்தவர் யார்?
6. 1917 ஆம் ஆண்டு மரியன்னை மூன்று சிறுவர்களுக்கு காட்சி கொடுத்த நாடு எது?
7. மரியாளின் விண்ணேற்பு விசுவாச சத்தியமாகப் பிரகடனப் படுத்தப்பட்டது யாரால்?
8. பிரான்சில் உள்ள லூர்து கெபியில் மரியன்னையின் காட்சி பெற்ற சிறுமியின் பெயர் யாது?
9. கிறிஸ்தவ ஆசிரியர்களின் பாதுகாவலர் யார்?
10. 1979 ஆம் ஆண்டில் சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற பெண் துறவி யார்?

குறிப்பு: உங்கள் பதில்கள் வந்து சேர வேண்டிய இறுதி நாள் ஐப்பசி 20ம் திகதி. சரியான விடை எழுதும் முதல் மூவரின் பெயர்கள் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு பாராட்டுக்குரியதாக பிரசுரிக்கப்படும்.

மன்னார் திருமறைப் பணி நிலையத்தினால் நடாத்தப்பட்ட

# விவிலியப் போட்டி முடிவுகள்

*விவிலியப் போட்டிகள் பங்கு மட்டத்திலும் பின்னர் மறைக் கோட்ட மட்டத்திலும் இடம்பெற்று பின்னர் 26.8.2000 அன்று மறை மாவட்ட ரீதியில் திருமறைப் பணி நிலையத்தில் நடாத்தப்பட்டன. இப்போட்டிகளை சிறப்பாக நடாத்தி முடிக்க ஒத்துழைத்த அனைத்து நல் உள்ளங்களுக்கும், பங்கெடுத்த மாணவ மாணவிகளுக்கும் திருமறைப் பணி நிலைய இயக்குநர் அருட் பணி டெஸ்மன் குலாஸ் அடிகளார் தனது நெஞ்சார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றார்.*

## மறை மாவட்ட ரீதியிலான விவிலியப் பேச்சு, பாட்டுப் போட்டி முடிவுகள்

### பேச்சுப் போட்டி

FO 1

| இடம் | பெயர் | பங்கு |
|---|---|---|
| 1ம் | ம. ஜொனார்த்தன் | (வவுனியா) |
| 2ம் | செ. அன்ரன் ருத்ரா | (வவுனியா) |
| 3ம் | அ. அஸ்வினி குரூஸ் | (தலைமன்னார்) |
| 4ம் | ம.ஜேர்மைன் குரூஸ் | (பேசாலை) |
| 5ம் | வி. ஜெரமி ஜேசுராஜ் | (வவுனியா) |

FO 2

| இடம் | பெயர் | பங்கு |
|---|---|---|
| 1ம் | கு.விளோசியா | (வவுனியா) |
| 2ம் | பொ. டில்றுக்சி குரூஸ் | (பேசாலை) |
| 3ம் | ப.துஸ்யந்தி | (உயிலங்குளம்) |
| 4ம் | ஜெ. ஜெரோலின் | (பேசாலை) |
| 5ம் | அ.அஜித் | (வவுனியா) |

FO 3

| இடம் | பெயர் | பங்கு |
|---|---|---|
| 1ம் | பீ. மரிய நிசாந்தி | (வவுனியா) |
| 2ம் | தி. டிசாலினி மஸ்கிறிஞ்ஞ | (பேசாலை) |
| 3ம் | அ. யேசுராஜா | (கற்கிடந்தகுளம்) |
| 4ம் | டெஸ்மன் வெற்றிராஜ் | (நானாட்டான்) |
| 5ம் | எ. பற்றிமன் | (பம்பைமடு) |

FO 4

| இடம் | பெயர் | பங்கு |
|---|---|---|
| 1ம் | ம. தர்சினி லூட்ஸ் குரூஸ் | (பேசாலை) |
| 2ம் | ஜெ. றெணிக்கா குரூஸ் | (பேசாலை) |
| 3ம் | அ. யூட் பிரசாந்தன் | (உயிலங்குளம்) |
| 4ம் | செ. வனிதா | (செட்டிகுளம்) |
| 5ம் | சு. அருந்தவராஜன் | (கற்கிடந்தகுளம்) |

### பாட்டுப் போட்டி

FO 1

| இடம் | பெயர் | பங்கு |
|---|---|---|
| 1ம் | எப். அன்ரனிலா | (மன்னார்) |
| 2ம் | ச. மேரி ஜான்சி | (கற்கிடந்தகுள) |
| 3ம் | அ. மேரி லோகினி | (விடத்தல்தீவு) |
| 4ம் | பி. சுதர்சினி | (முருங்கன்) |
| 5ம் | தே. தேன்மொழி | (நானாட்டான்) |

FO 2

| இடம் | பெயர் | பங்கு |
|---|---|---|
| 1ம் | ச. யசோதா | (கற்கிடந்தகுள) |
| 2ம் | யே. இதயராஜ் | (முருங்கன்) |
| 3ம் | செ. ஆன் செசியா பீரிஸ் | (வங்காலை) |
| 4ம் | பி. அ. அனஸ்ரா | (மன்னார்) |
| 5ம் | பி. லடிஸ்லஸ் | (விடத்தல்தீவு) |

FO 3

| இடம் | பெயர் | பங்கு |
|---|---|---|
| 1ம் | அ. மேரி எடல் கீர்த்தனா | (மன்னார்) |
| 2ம் | தே.றொபினா | (நானாட்டான்) |
| 3ம் | பொ.அஞ்சலோபீரிஸ் | (கற்கிடந்தகுளம்) |
| 4ம் | ம. சுதர்சன் லோகு | (பேசாலை) |
| 5ம் | கி. நிமலி | (விடத்தல்தீவு |

FO 4

| இடம் | பெயர் | பங்கு |
|---|---|---|
| 1ம் | ரி.ஆன்தர்சிக்கா பீரிஸ் | (வங்காலை) |
| 2ம் | செ. வனிதா | (செட்டிகுளம்) |
| 3ம் | சி. மஞ்சு பீரிஸ் | (முருங்கன்) |
| 4ம் | ஜே. டள்சி குருஸ் | (பேசாலை) |
| 5ம் | ஏ. யேசுராணி | (வங்காலை) |

## மடு உப கோட்ட ரீதியிலான பேச்சு, பாட்டுப் போட்டி முடிவுகள்

போக்குவரத்து நெருக்கடிகள் வசதியீனங்கள் காரணமாக மறைமாவட்ட ரீதியில் பேச்சு பாட்டுப் போட்டிகளில் பங்கு பற்ற முடியாமையினால் மடு உப கோட்ட மட்டத்தில் வெற்றி பெற்றவர்களில் முதல் மூன்று இடங்கள்

### பேச்சுப் போட்டி

குழு 1

| இடம் | பெயர் | பங்கு |
|---|---|---|
| 1ம் | இ. பாரியாதா | (மடு) |
| 2ம் | பிரியங்கா | (பண்டிவிரிச்சான்) |
| 3ம் | சூ. வோல்டி | (பண்டிவிரிச்சான்) |

FO 2

| இடம் | பெயர் | பங்கு |
|---|---|---|
| 1ம் | யோ. சுதர்சினி | (அடம்பன்) |
| 2ம் | அ. பபியோலா | (ஆக்காட்டிவெளி) |
| 3ம் | இ. நிரோசா | (தட்சனாமருதமடு) |

FO 3

| இடம் | பெயர் | பங்கு |
|---|---|---|
| 1ம் | ஜெனிஸ்ரன் யூலியன் | (ஆ.வெளி) |
| 2ம் | அருட்செல்வி | (பண்டிவிரிச்சான) |
| 3ம் | அருள்ளோசியா | (அடம்பன்) |

FO 4

| இடம் | பெயர் | பங்கு |
|---|---|---|
| 1ம் | பற்றிமாசுகந்தினி | (பண்டிவிரிச்சான்) |
| 2ம் | நிசாந்தினி குரூஸ் | (பண்டிவிரிச்சான்) |
| 3ம் | பதுவஜோதி | (தேவன்பிட்டி) |

### பாட்டுப் போட்டி

குழு 1

| இடம் | பெயர் | பங்கு |
|---|---|---|
| 1ம் | ப.பியூட்டி ரென்சியா | (பெ.ப.விரிச்சான்) |
| 2ம் | தே. அஞ்சலி | (தேவன்பிட்டி) |
| 3ம் | லோ. பிரேமலா | (மடு) |

FO 2

| இடம் | பெயர் | பங்கு |
|---|---|---|
| 1ம் | பே.கிங்ஸ்ரன் | (பெ. பண்டிவிரிச்சான்) |
| 2ம் | சூ. நீலான் | (ஆட்காட்டிவெளி) |
| 3ம் | யோ. செறின் நிருசா | (அடம்பன்) |

FO 3

| இடம் | பெயர் | பங்கு |
|---|---|---|
| 1ம் | நோ. கௌந்தி | (மடு) |
| 2ம் | ச. அனுசியாமேரி | (பெ.பண்டிவிரிசான்) |
| 3ம் | ச.ஆரோக்கியடயானா | (ஆட்காட்டிவெளி) |

FO 4

| இடம் | பெயர் | பங்கு |
|---|---|---|
| 1ம் | செல்வராணி | (மடு ) |
| 2ம் | ல. டிலிசியா | (பெ.பண்டிவிரிச்சான்) |
| 3ம் | ஆ.பற்றிமா சுகந்தி | (பெ.பண்டிவிரிச்சான்) |

## வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்

மேற்படி போட்டிகளில் ஆர்வமுடன் கலந்து கொண்ட மாணவ மாணவியருக்கும், வெற்றி பெற்ற வெற்றியாளருக்கும் மற்றும் மாணவர்களை ஊக்குவித்து நெறிப்படுத்தி தகுதிப்படுத்தி போட்டிகளில் பங்குபற்ற வைத்த பெற்றோருக்கும், மறை ஆசிரியர்களுக்கும், ஊக்குவிப்பாளர்களுக்கும், அருட் பணியாளர்களுக்கும் மன்னாவின் சார்பில் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்.

## உங்கள் தொடர்புகளுக்கு

கீழே உள்ள இரண்டு முகவரிகளுள் ஏதாவது ஒன்றுடன் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்

**அலுவலக முகவரி**

பதிப்பாசிரியர்
"மன்னா"
திருமறைப் பணி நிலையம்
புனித செபஸ்தியார் வீதி
மன்னார்

**OFFICE ADDRESS**

The Edtior
"MANNA"
Pastrol Centre
St. Sebastian Street
Mannar

**வதிவிட முகவரி**

பதிப்பாசிரியர்
"மன்னா"
பங்குப் பணிமனை
புனித லோறன்சியார் ஆலயம்
தலைமன்னார்

**RESIDENTIAL ADDRESS**

The Edtior
"MANNA"
Parish House
St. Lawrence Church
Talaimannar

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல கட்சிகளும்

# நீதியான தேர்தலுக்கு தம்மை அர்ப்பணிக்க வேண்டும

## இலங்கை ஆயர் பேரவையின் அறிக்கை

தேர்தல் களம் சூடு பிடித்துள்ள இவ் வேளையில் நாட்டின் நிலைமை குறித்தும் தேர்தல் குறித்தும் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை விடுத்துள்ள அறிக்கையின் சுருக்கம்.

"போரினாலும் வன்முறையினாலும் நிலையான தீர்வை அடைய முடியாது. போரிடும் தரப்பினருக்கிடையில் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்த உடன் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். அத்துடன் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசியல் தீர்வினை அடிப்படையாகக் கொண்ட பயனளிக்கும் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும். எதிர்வருகின்ற பொதுத்தேர்தல் களத்தில் எல்லாக் குடிமக்களினதும் அடிப்படை சமத்துவத்தை உறுதிப்படுத்துவது முக்கியமானதாகும். பொதுத் தேர்தலில் போட்டிடுகின்ற சகல கட்சிகளும் பொதுத் தேர்தலில் வன்முறை, ஆள்மாறாட்டம், குற்றச் செயல் என்பன இல்லாத ஒரு நீதியான தேர்தலுக்கு தம்மை அர்ப்பணிக்க வேண்டும். அப்போதுதான் உண்மையான ஜனநாயகம் பேணிப் பாதுகாக்கப்படும்" என அவ்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## காயப்பட்ட படையினருக்கு கொழும்பு மறைமாவட்ட பங்குகளின் பங்களிப்பு

காயப்பட்ட படையினருக்கு உதவும் முகமாக கொழும்பு மறை மாவட்டத்திலே பங்குகள் மற்றும் கத்தோலிக்க நிறுவனங்கள் பங்களிப்புச் செய்துள்ளன. பங்குகளில் இருந்து ரூபா 1,196,926.94 தொகையும் கத்தோலிக்க நிறுவனங்களிடம் இருந்து ரூபா 131, 019.99 தொகையும் சேகரிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

## சாளக்குடி தியானக் குழுவினர் இலங்கை வருகை

கேரளா சாளக்குடி தெய்வீகத் தியான இல்லமானது(The Divine Retreat Centre) ஆசியாக் கண்டத்திலேயே மிகவும் சிறந்த பெரிய கத்தோலிக்க தியான நிலையம் என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இத் தியான இல்லத்திலிருந்து வருகை தரும் குழுவினர் செப்டம்பர் 16-24 வரை கொழும்பு மறை மாவட்டத்தில் தியானங்களையும் கருத்தரங்குகளையும் நடாத்தினர். இக்குழுவுக்கு அருட் கலாநிதி அகஸ்ரின் வல்லூரான் தலைமை வகித்தார். இத்தியான இல்லத்திலிருந்து அருட் தந்தை அகஸ்ரின் மொண்டேகாட் தலைமையில் வருகை தந்தவர்களே மன்னார் மறை மாவட்டத்திலும் தியானங்களை நடாத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டு திருத்தந்தையர்களுக்கு

## முத்திப்பேறு பட்டம்

முதலாம் வத்திக்கான் சங்கத்தைக் கூட்டுவித்தவரும் தேவதாயின் அமல உற்பவத்தைப் பிரகடனம் செய்தவருமான 9 ஆம் பத்தினாதர் பாப்பரசரும் 2ம் வத்திக்கான் சங்கத்தைக் கூட்டியவரான திருத்தந்தை 23 ஆம் அருளப்பரும் செப்படம்பர் மாதம் 3ஆம் திகதி முத்திப் பேறு பெற்றவர்களாக திருத்தந்தையினால் பிரகடனம் செய்யப்பட்டார்கள். புனித லோறன்ஸ் பேராலயத்தில் அடக்கம் செய்யப்பட்டிருந்த 9 ஆம் பத்தினாதரது உடல் அழியாத நிலையில் உள்ளது.

கருச்சிதைவுக்கு எதிராகப்

## பத்து லட்சம் செபமாலை

உலகில் இன்று கருச்சிதைவு பெருகி வரும் வேளையில் அயர்லாந்து நாட்டில் கருச்சிதைவுக்கு எதிராகப் பத்து லட்சம் செபமாலை ஒப்புக் கொடுக்கப்ட்டது. ஹள்மன் சர்வதேச வாழ்வு (Herlmen Life International) என்ற இயக்கத்தின் தலைமையில்தான் இது நடைபெற்றது. உலகெங்கும் பெருமளவில் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் இதற்கு முழு ஆதரவு அளித்தனர். கருச்சிதைவு செய்வதால் கொலை செய்யப்படும் குழந்தைகளின் ஆன்மா சாந்தி அடையவும் கருச்சிதைவு உலகில் ஒழிய வேண்டும் என்பதற்காகவும்தான் செபமாலை ஒப்புக் கொடுக்கப்ட்டது என்று ஹள்மன் சர்வதேச வாழ்வு இயக்குநர் கூறுகின்றார்.

நற்கருணை வாழ்வைப் பற்றி சிந்திக்க

## குருக்களுக்கான கருத்தமர்வு

நற்கருணையின் ஆண்டாகிய இவ்யூபிலி ஆண்டில் குருக்களும் நற்கருணையும் என்ற தலைப்பில் மன்னார் மறைமாவட்டத்தில் பணிபுரியும் குருக்களுக்கான மூன்றுநாள் கருத்தமர்வு புரட்டாதி 11,12,13 ஆகிய தினங்களில் ஆயர் இல்லத்தில் நடைபெற்றது. இக கருத்தமர்வை நெறிப்படுத்த நற்கருணை நாதர் சபையைச்சேர்ந்தடிலான் பேர்னாண்டோ அடிகளார் வருகை தந்திருந்தார்.

# சவேரியார் ஆண்கள் கல்லூரி மாணவர்கள்

# மிகப் பெரும் சாதனை





## வரலாறு படைத்தவர்களுக்கு மகத்தான வரவேற்பு

கடந்த 18.09.2000 அன்று கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதிற்கு உட்டபட்ட ஆண்களுக்கான உதை பந்தாட்டப் போட்டியில் மன்னார் புனித சவேரியர் ஆண்கள் தேசிய கல்லூரி மாணவர்கள் முதலாம் இடத்தைப் பெற்று சரித்திரம் படைத்தனர். அதேவேளை 17 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான உதை பந்தாட்டப் போட்டியிலும் இதே கல்லூரி மாணவர்கள் மூன்றாம் இடத்தைப் பெற்றனர். கல்லூரி அதிபர் அருட் சகோ ஸ்ரனிஸ்லசின் வழிகாட்டலில் ஆசிரியர்கள் திரு ஞானராஜ் மற்றும் ராஜு ஆகியோர் இவ் உதைபந்தாட்ட அணியினரைப் பயிற்றுவித்தார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. இம்மாதம் 19 ஆம் திகதி இவ் இரு அணியினரும் கொழும்பில் இருந்து மன்னார் வந்திறங்கியபோது மன்னார் நகரில் இவர்களுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் வெடி முழக்கங்கள் அதிர்ந்தன. கல்லூரி அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் மன்னார் வலயக் கல்விப் பணிமனையின் அதிகாரிகள் ஆகியோர் இவ் வீரர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்றனர். பிரதான வீதியில் அமைந்துள்ள அரச, அரச சார்பற்ற திணைக்களங்களின் அதிகரிகள் தமது திணைக்களங்களுக்கு முன்பாக நின்று வாழ்த்து தெரிவித்தனர். சவேரியார் கல்லூரி, மற்றும் சித்திவிநாயகர் இந்து தேசிய கல்லூரி பாண்ட் இசைக் குழுவினர்கள் இவ் வீரர்களை பிரதான வீதி வழியாக வரவேற்று கல்லூரிக்கு அழைத்துச் சென்றனர். தேசிய ரீதியில் சாதனை புரிந்த எம் மாணவ வீரர்களுக்கும், ஊக்கமளித்து பயிற்றுவித்த அதிபர்கள், மற்றும் பயிற்சியாளர்களுக்கும் எமது நல் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றோம்.

# அன்னைக்கு ஓர் அழகு தலம்

### வவுனியா மதவு வைத்த குளத்தில் அமைந்துள்ள செபமாலை அன்னை ஆசிரமத்தில்

## பத்திமா அன்னையின் கெபி

கடந்த 13. 09.2000 அன்று மன்னார் ஆயர் அவர்களால் மேற்படி கெபி திறப்பு விழா இடம்பெற்றது. அன்றைய தினம் சிறப்பான திருச்செபமாலை வழிபாடும், திருப்பலியும் ஆயர் தலைமையில் இடம் பெற்றது. இக் கெபியின் தோற்றம் போர்த்துக்கள் நாட்டில் உள்ள பத்திமா அன்னை கெபியின் உட்தோற்றத்தை ஒத்ததாகும். போர்த்துக்கல் பத்திமா அன்னையின் திருத்தலப்பேராலய வடிவமைப்பையும் அன்னையின் காட்சிகள் பெற்ற லூசியா பிரான்சிஸ் ஜசிந்தா ஆகிய சிறுவர்களின் தோற்றமும் அழகாகத் தீட்டப்பட்டுள்ளது. இங்குள்ள பத்திமா அன்னையின் திருச்சுரூபம் போர்த்துக்கல் நாட்டிலிருந்தே வந்துள்ளது.

குறிப்பு:- அடுத்த மன்னா இதழில் பத்திமா அன்னையின் செய்தி வெளியிடப்படும்

### இலங்கை திருச்சபையின் 500 ஆண்டு கால வரலாற்றை சித்தரிக்கும்

## மாபெரும் யூபிலிக் கண்காட்சி

"கிறிஸ்து ஜயந்திக் கண்காட்சி" என்ற பெயரில் இலங்கைத் திருச்சபையின் 500 ஆண்டுகால வரலாற்றை சித்தரிக்கும் முகமாக கொழும்ப மறைமாவட்டத்தில் மாபெரும் கண்காட்சி இடம்பெற்றது. புரட்டாதி 2ம் திகதி கொழும்புப் பேராயர் அவர்கள் நீர் கொழும்பில் இக் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்

திருத்தந்தையின் 21 வருட ஆட்சிக் காலத்தில்

## 989 பேர் ஆசாரத்துக்கு உரியவர்களாக உயர்த்தப்பட்டுள்ளனர்

திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரின் 21 வருட ஆட்சிக் காலத்தில் 989 பேர் ஆசாரத்துக்கும் வணக்கத்துக்கும் உரியவர்களாக உயர்த்தப்பட்டுள்ளனர். ஏப்ரல் 10 ம் திகதி நூற்பதாயிரம் யாத்திரீகர் கலந்து கொண்ட ஒரு வைபவத்தில் இரு குருக்களும் மூன்று கன்னியர்களும் ஆசாரத்துக்கு உரியவர்களாக [illegible] திருத்தந்தையால் [illegible]

## ஆயர்கள் தொகை நிறைவு குருக்கள் தொகை குறைவு

1978 முதல் 1998 வரையான 20 ஆண்டுகளில் திருச்சபையில் ஆயர்கள் தொகை 20% வீதத்தால் அதிகரித்துள்ளதாக வத்திக்கானில் வெளியிடப்பட்ட விபரத்திலிருந்து தெரிய வருகின்றது. உலக ஆயர்கள் தொகை 3700 இலிருந்து 4400ஆக உயர்ந்துள்ளது. மொரிக்காவில் 38 வீதமும் ஐரோப்பாவில் 33 வீதமும் ஆசியாவில் 14 வீதமும் ஆபிரிக்காவில் 12 வீதமும் அவுஸ்திரேலியாவில் 3 வீதமும் அதிகரிப்பு இடம் பெற்றுள்ளது. இதே காலத்தில் குருக்கள் தொகை 416 300 இலிருந்து 406 000 ஆக வீழ்ச்சி அடைந்துள்ளது. எனினும் மறை மாவட்டக் குருக்ள் தொகை அதிகரித்து வந்துள்ளது குறிப்பிடத் தக்கது. அதே வேளையில் நிரந்தரத் திருத் தொண்டர்கள் உபதேசிகள் பொது நிலைச் சேவையாளர் தொகை உயர்ந்துள்ளது.

கல்வித்தாயின் நினைவை இரைமீட்டும

### புனித பத்திரிசியார் கல்லூரியின் மன்னார் மாவட்ட பழைய மாணவர் அமைப்பு

மன்னார் மாவட்டத்தில் உள்ள புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து மேற்படி அமைப்பை உருவாக்கி உள்ளனர். புனித பத்திரிசியார் கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு எதிர்வரும் 30.09. 2000 அன்று செபஸ்ரியார் பேராலயத்தில் நன்றித் திருப்பலியும் அதைத் தொடர்ந்து மதிய உணவும் இடம் பெறும். அன்றைய நிகழ்வின்போது நினைவு முத்திரையின் முதல் நாள் உறையும் வெளியிடப்படும.

## சிறந்த மாணவர்களாகத் தெரிவு

சவேரியார் கல்லூரியின் 8 மாணவர்கள் மன்னார் மாவட்டத்தில் சிறந்த மாணவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். மன்னார் லயன்ஸ் கழகத்தினால் ம்ன்னார் மாவட்டத்தில் சிறந்த மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை இவ்வாண்டும் நடாத்தப்பட்டது. 6 ஆம் ஆண்டு தொடக்கம் 10 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட மாணவர்களில் ஒவ்வாரு ஆண்டிலும் இருந்து மூன்று பேர் தெரிவு செய்யப்பட்டு எல்லாமாக 15 மாணவர்களுக்கு இப் பரிசில் வழங்கப்பட்டது. இப் 15 பேரில் 8 மாணவர்கள் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியைச் சார்ந்தவர்கள்.

இப்பத்திரிகை மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்ட்டு கொழும்பு கொட்டாஞ்சேனை அச்சகத்தில் அச்சிடப்பட்டு ஆசிரியரால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org